
# சுதந்திர தாகம்



05.08.'89

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

# சுதந்திரதாகம்

05.08.89 சனிக்கிழமை மாலை 7 மணி.
SOPHUSHES AUDITORIUM
UNIVERSITY OF OSLO.
BLINDERN

* எமைப்பிரிந்த வேங்கைகளே
  -மழலைகளின் அஞ்சலி

* யாகராகங்கள்

* மண்ணின் நிகழ்வுகள்

* உலகத்தமிழினமே எண்ணிப்பார்
  -அபிநயம்

* விலங்கு சுமந்து நடப்போமா
  -நாடகம்

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
ஒஸ்லோ, நோர்வே

தமிழீழவிடுதலைப் புலிகள்
நோர்வேக்கிளை

# சமர்ப்பணம்

இலேசாய்க் கருதி
நுழைந்த எதிரி...
எடுத்து வைத்த
ஒவ்வோர் அடியையும்
புல்லும் எதிர்த்துப்
போர்க் கோலம் பூண்டது...
பூவும் நெருப்புப்
பொறியாய்ப் பொசுக்கியது...

அந்தக் கணங்களில்
எமது களங்களில்

பொன்னை உதறியும்
பூவை விலக்கியும்
மானுடப் பாதி
மறுபடி எழுந்தது.

ஏந்திய ஆயுதமும்
உயர்த்திய பதாகையும்
வீழ்ந்து படாமல்
வீரத்தோள் கொடுத்தது...

எதிரியின் இலக்கு
இனஒடுக்கு முறைமட்டுமல்ல...
பாலியல் ரீதியான பலாத்காரமுந்தான்...
துருப்பிடித்த நினைவுகளோடு
நுழைந்த எதிரிக்கு
வளைத்துப் பிடிக்கும்
கொடிகளாய் இல்லை....
பறித்துக் கசக்கும்
மலர்களாய் இல்லை....
எதிர்க்கும் பெண்புலிகள்
என்பதை நிறுவினீர்...
இறந்து வாழும்
வாழ்க்கையை நிரூபித்தீர்...



மரணத்தில் தன்மான
வாழ்க்கையை நிச்சயித்த
வீராங்கனைகளே! உமக்கிது காணிக்கை

# எங்கள் தலைவன் பிரபாகரன்

புதுவை இரத்தினதுரை



பொங்குமா கடலின் ஓரம்
பிறந்ததோர் புயலின் மையம்
தங்கமண் நெடுநாள் செய்த
தவத்தினால் உதித்த பையன்
வெங்களம் ஆட என்றே
வேங்கையாய் நிமிர்ந்த தீரன்.
எங்களின் தலைவன்; "தம்பி"
இந்த நூற் றாண்டின் வீரன்.

தூங்கிய தமிழர் நெஞ்சை
துடித்திடச் செய்தோன்; ஈழம்
வாங்குவோம் எழுக! என்றே
வாலிப மனத்தை வென்றோன்.
வேங்கைகள் சாவுக் கஞ்சா
வீரர்கள் என்றே சொல்லத்
தாங்கிய தலைவன்! எங்கள்
தளபதி! அன்புத் தம்பி!

ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனை; தமிழீ ழத்தின்
பாயிரம் ஆகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை
ஏவிய படைகள் வந்து
என்னடா செய்யும்; எங்கள்
காவியம் களத்தில் வெல்லும்.
காலங்கள் அவன்பேர் சொல்லும்.

எத்தனை புயல்கள் வந்து
எழுந்தன; தலைவன் தன்னை
எத்தனை படைகள் ஒன்றாய்
எதிர்த்தன; துரோகக் கும்பல்
எத்தனை விதமாய் சொல்லி
இகழ்ந்தன; இடையில் விட்டு
எத்தனை பேர்கள் சென்றார்.
இறுதியில் தலைவன் வென்றான்.

கொட்டடா! முரசு; எங்கே
கொம்பது எடுத்து ஊது.
தட்டடா! கைகள்; எங்கள்
தலைவனைப் பாடு; எம்மை
முட்டிய துயரம் யாவும்
முடிந்திடும்; புலிகள் சேனை
எட்டிய வரையும் பாய்ந்து
எழுந்திடும்; தலைவன் வாழி!

# சுதந்திர தாகம்

## நாங்கள் நாங்களாக......!

ஒடுக்குமுறைகள் இருக்கும்வரை உரிமைப் போராட்டங்களும் தொடர்ந்தே தீருமென்ற வரலாற்று நியதிக்கேற்ப, இன்று உலகின் பல பாகங்களிலும் வெவ்வேறு இனத்தவராலும், மக்கள் சக்திகளாலும் இவ் ஒடுக்குமுறைக்கு எதிரான நியாயபூர்வமான விடுதலைப்போராட்டங்கள் இடம் பெற்றுவருகின்றன. அடக்குமுறையின் அவலங்களாலும், விடுதலைப்போராட்டங்களில் ஏற்படுகின்ற இயல்பான புறச்சூழ்நிலைகள் காரணமாகவும் அவ்வப்பிரதேசங்களைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் இன்று மேற்கத்தியநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். தமிழீழ மக்கள் மீதான அரச, அந்நிய அடக்குமுறைகளால் எழுந்த சூழலும் இவ்நிலமைக்கு ஒன்றும் விதிவிலக்கானதல்ல.

ஒரு இனமானது, தனித்துவமான மொழியைக் கொண்டிருக்கின்ற போதும், தனக்கே உரித்தான பண்பாட்டுக் கலை, கலாச்சார வாழ்க்கை முறையில் ஈடுபடும்போதும், தனது பாரம்பரியப் பொதுப் பிரதேசத்தில் வாழ்கின்ற உரிமையைக் கொண்டிருக்கின்ற போதுமே முழுமையடைந்ததோர் இனமாகக் கருதப்படுகின்றது. இன்று மேற்கத்திய நாடுகளிற்குக் குடிபெயர்ந்துள்ள தமிழீழமக்களாகிய எம்மைப் பொறுத்தவரை, நாம் வாழும் நாடுகளில் உள்ள பல்வேறு தாக்கங்களின் நிமித்தமாக எம்மை ஒர் தனித்துவமான இனமாக இனம்காட்டும்தன்மை குன்றிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இன்று போராட்டத்தின் பழுவினைத் தாங்கியவண்ணம் எண்ணற்ற தியாகங்களிற்கும், அர்ப்பணிப்புகளிற்கும் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழீழமக்கள், எமது பழைய சமுதாயச்சீர்கேடுகளின் தன்மைகளை அநுபவரீதியாகவும், யதார்த்தரீதியாகவும் உணர்ந்தும், போராட்டத்தின் வளர்ச்சிப்போக்கில் ஏற்படும் இயல்பான இவ்மாற்றங்களுக்கு தம்மை உட்படுத்தியும், போராட்டத்தின் புரட்சிகரச் சூழலில் ஓர் புதிய சமுதாயமாக மாறிவருகின்றார்கள். அதேவேளை போராட்ட சூழலில் இருந்து முற்றிலும் அந்நியப்பட்டு தூரத்தே வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம்

- போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான சகலவித பங்களிப்புகளையும் நல்குதல்.
- நாம் வதியும் நாடுகளிலில் நிலவும் வசதிக்கேற்ப தமிழீழத்தின் எதிர்கால அபிவிரித்திக்குத் தேவையான வளங்களைத் திரட்டுதல்.

என்ற எமது பொதுவான பங்களிப்போடு மட்டுமன்றி, தமிழீழத்தில் ஒரு புனித இலட்சியப் போராட்டத்தோடு இணைந்தும், அச்சூழலில் தம்மை புதிய சமுதாயமாக மாற்றியமைத்தும் வருகின்ற தமிழீழமக்களோடு உணர்வுரீதியாகவும் கலக்கவேண்டிய ஒர் தார்மீகக் கடமையையும் எம் தோள்மீது சுமக்கவேண்டியவர்களாகின்றோம்.

நாடு பெயர்ந்திருக்கும் தமிழ்மக்களாகிய எம்மைப் பொறுத்தவரை மேற்கத்திய நாடுகள் இடையில் வந்த வெறும் தங்குமடங்களாகும். அரசியல் தஞ்சம் கோரியோரையும், நாடு பெயர்ந்தோரையும் அவரவர்களின் நாடுகளிற்குத் திருப்பி அனுப்புவதில் இந்நாடுகள் பலவழிகளிலும் முனைவதை அனைவரும் அறிவர். நாளை ஏற்படும் புதிய சூழ்நிலையில் மீண்டும் தாய் மண்ணிற்குச் செல்ல வேண்டிய நிலைக்கு அனைத்து வெளிநாடுவாழ் தமிழர்களும் தள்ளப்படுவர் என்பது உண்மை.

வரலாற்றின் கால ஓட்டத்தில் நாளை தமிழீழத்திற்கு மீளச்செல்கின்ற அனைத்துத் தமிழ்மக்களும் எமது பழைய சமுதாயச் சீர்கேடுகள் களையப்பட்ட, போராட்டச்சூழலில் வளர்ந்த, ஓர் புதிய சமுதாயத்துடன் ஒன்றிணைந்து வாழ எம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறான எண்ணக்கருவற்று, மேற்கத்தியநாடுகளின் பிற்போக்கு நாகரீகங்களில் மூழ்கி, எம்மைத் தமிழர் என இனம் காட்டாமல் எமது கடமைகளை மறந்து ஒரு “தொலைந்து போகும் சந்ததியினராக” (A LOST GENERATION) வாழாது, எமக்கென ஒரு நாடு உருவாகி வருவதையும், அந்நாடே எமது தாயகம் என்பதையும், அதுவே ஈழத்தமிழினத்தின் பாரம்பரிய பிரதேசம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

# இந்தியாவின் போலிச் சமாதான முயற்சிகளும் இன்றைய பேச்சுவார்த்தைகளும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு இலங்கை - இந்திய அரசுகளால் எழுதப்பட்ட ஒப்பந்தம் வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் செயலிழந்து, பிரச்சினையினை மேலும் சிக்கலாக்கி பல புதிய பரிமாணங்களையும் தோற்றுவித்துள்ளது. ஒப்பந்தத்தை எதிர்த்தும், இந்திய புவிசார் அரசியலின் அடிப்படையில் அமைந்த பிராந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்த்தும் விடுதலைப்புலிகளால் மேற் கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான கெரில்லா யுத்தம் இந்திய அரசுக்கு பெரும் தலைவலியினைக் கொடுத்து வருவதுடன் இராஜதந்திர முனையில் விடுதலைப் புலிகள் மேற் கொண்டு வரும் அரசியல் நகர்வுகள் ஓர் இராஜதந்திரத் தோல்வி நிலையினையும் இந்திய அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் திகதி, இந்திய - தமிழீழ யுத்தம் ஆரம்பித்த பின், இருபது மாதங்களுக்கு மேலாகியும் இந்திய இராணுவத்தினால் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாதிருப்பது அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கு அடிப்படையான விடயமாக அமைகின்றது. தொடர்ச்சியான யுத்தப் பாதையின் போது, இந்தியா விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்வதற்கு எடுத்த முயற்சிகள் போலியான அரசியல் இராஜதந்திரங்களே என்பதனையும், விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான நிலைமைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதனையும், இப்பேச்சு வார்த்தைகள் மூலம் தோற்றம் பெற்ற நிலமைகள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## இந்தியாவின் சமாதான முயற்சிகளும் அவற்றின் போலித் தன்மைகளும்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்க்காது என்பதனை வெளிப்படுத்திய பின்னரும், இந்திய அரசால் மேற்கொள்ளப்படும் ஒரு சமாதான முயற்சிக்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்ற இந்தியப் பிரதமரின் வேண்டுகோளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கவும், இந்திய இராணுவத்துடன் மோத வேண்டிய நிலையினைத் தோற்றுவிக்காமல் இருப்பதற்காகவும் ஒப்பந்தத்துடன் இணைந்து செல்ல விடுதலைப் புலிகள் தீர்மானித்திருந்தனர். ஆனால் இந்திய அரசு தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பேணாது தனது நலன்களை மட்டுமே பிரதானமாகக் கொண்டு செயற்பட முனைந்தமை, விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஒரு முறுகல் நிலையினைத் தோற்றுவித்து, அம் முறுகல் நிலையின் வளர்ச்சிப் போக்கு யுத்தமாக வெடித்தது.

யுத்தம் ஆரம்பித்த பின்னர் விடுதலைப்புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டு வருவதற்காக அவர்களுடன் சமரசம் செய்வதற்கு தான் பகீரதப் பிரயத்தனம் செய்வதாக ஒரு மாயையினைத் தோற்றுவிக்கும் முயற்சிகளில் இந்தியா இறங்கியது. விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும் எனவும் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் இந்திய . அரசால் தொடர்ச்சியான வேண்டுகோள்கள் விடப்பட்டன. ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யுத்த நிறுத்தம் செய்யப்பட்டதாகவும் அந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த விடுதலைப்புலிகள் தவறிவிட்டனர் எனவும் இந்திய தரப்பால் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் இந்தியாவின் சமாதான முயற்சிகள், ஒடுக்கப்பட்ட, ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் விடிவுக்காக போராடிய, போராடிக் கொண்டிருக்கும் மக்கள் சமூகத்தின் நியாயமான அதிருப்திகளைக் கவனத்திற் கொள்ளாமல், இந்திய அரசின் நலன்களையும் மேலாண்மையினையும் நிலைநிறுத்தும் நோக்கிலேயே மேற் கொள்ளப்பட்டன. இந்திய அரசினையும் ஆளும் வர்க்கத்தினையும் எஜமானர்களாக ஏற்று, தமிழ்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையினை அடகு வைத்து, ஆயுதங்களைக் கையளித்துவிட்டு, இந்திய - இலங்கை ஆளும் வர்க்கங்கள் போடும் எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு, மக்கள் முன் குற்றவாளிகளாக விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற

நோக்கு நிலையே இந்திய சமாதான முயற்சிகளில் காணப்பட்டன.

எதுவித நிபந்தனைகளுமில்லாமல் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தும் நிபந்தனையற்ற முறையில் பேசுவதற்கு இந்தியா தயாராக இருக்கவில்லை. அரசியல், இராஜதந்திரரீதியில் தனது இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்த சென்னையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதாக ஒரு போலி நாடகத்தை இந்திய அதிகாரிகள் அரங்கேற்றினர். இந்தியாவின் சமாதான முயற்சிகள் இதய சுத்தியற்றவை என்பதனை வெளிப்படுத்த பின்வரும் விடயங்கள் போதுமானவை.

1. 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் 22ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது யுத்த நிறுத்தம், உரிய முறையில் அமுல் படுத்தப்படாமை. தாம் யுத்தக் கைதிகளாக வைத்திருந்த 18 இந்தியச் சிப்பாய்களை விடுதலைப்புலிகள் விடுதலை செய்தமையால் ஏற்பட்ட அவமானத்தையும் அரசியல் அழுத்தத்தையும் ஈடு செய்ய மேற்கொள்ளப்பட்ட ஒரு இராஜதந்திர நடவடிக்கையாகவே இந்த யுத்த நிறுத்தம் அமைந்தது. இந்த யுத்த நிறுத்த காலத்தில் பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.



2. 48 மணி நேரம் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும், விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப் படவேண்டும் எனவும் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் போராட்டத்திற்கு உரிய மதிப்புக் கொடுக்காது, அதனை அலட்சியப்படுத்தி அன்னை பூபதியின் மரணத்துக்குப் பொறுப்பாக இருந்தமை. அன்னையின் தியாக மரணம் இந்தியாவின் உண்மை முகத்தை மக்களுக்கு மேலும் தெளிவுபடுத்தியது.
3. சென்னையில் பேச்சுவார்த்தை எனும் போலி நாடகத்தை ஆடிக்கொண்டு ஈழத் தமிழ்ப்பிரதேசங்களில் தீவிர இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டமை. சமரச முயற்சிகளில் இதய சுத்தியான முறையில் இந்திய அரசு ஈடுபட்டிருந்திருந்தால் ஒரு புறம் பேச்சு வார்த்தையினையும் மறுபுறம் தேடி அழிக்கும் நடவடிக்கைகளையும் ஒரே சமயத்தில் மேற்கொண்டிருந்திருக்க மாட்டாது.
4. சமாதான முயற்சிகளுக்காக சென்னையில் இருந்து வன்னிக்கு அனுப்பப்பட்ட போராளி லெப். கேர்ணல் ஜொனி இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டமை.
5. இரண்டாவது தடவையாக 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த காலத்தில் பேச்சு வார்த்தைகளுக்கான அடிப்படையினை வகுக்காது, ஆயுதக் கையளிப்புக்கான கால அவகாசம் என்ற முறையில் யுத்த நிறுத்தத்தினை அறிவித்தமை.
6. சென்னையில் இருந்து இந்திய அரச தரப்புடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வந்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை.
7. இதய சுத்தியான சமாதான முயற்சிகளுக்குப் பதிலாக தமக்குக் கைக்கூலிகளாக இயங்கக் கூடிய அமைப்புகளுக்கு மீண்டும் ஆயுதம் வழங்கி, அவ்வமைப்புகளை வளர்த்துவிட்டு பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியமை.
8. ஆயுதம் தாங்கிய கைக்கூலி அமைப்புக்கள் மூலம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களையும், இந்திய இராணுவத்தின் கொடூரத்தனத்தை எதிர்ப்பவர்களையும், மனித உரிமைகளுக்காக போராடுபவர்களையும் கொன்று குவிப்பதற்கான அடிப்படையினை உருவாக்கியமை.
9. விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாமல் எந்த ஒரு அமைதியினை ஏற்படுத்தும் முயற்சியும் வெற்றியளிக்காது எனும் யதார்த்த நிலையினைப் புறக்கணித்து, பல பொது அமைப்புக்களின் வேண்டுகோளையும் மீறி, நாட்டின் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒரு போலித் தேர்தலை நடாத்தி ஒரு கைக்கூலி அரசினை அமைத்துக் கொண்டமை.
10. புதிய ஆட்சியாளர்களுக்கு, துப்பாக்கி முனையில் அதிகாரத்தை நிலைநிறுத்த C.V.F. எனப்படும் (Citizen Voluntary Force) 'மக்கள் தொண்டர் படை'யினை உருவாக்கி, அப்படைக்கு பயிற்சி கொடுத்து இரத்தக் களரி நிலையினை உருவாக்கியமை.

மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகள் இந்தியாவின் நலன்களையும் மேலாண்மையினையும் நிலை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளே என்பது எந்தவித சந்தேகத்திற்கிடமற்ற முறையில் புரிந்து கொள்ளப்படக்கூடியன. இலங்கையில் அமைதியினை ஏற்படுத்துவது இந்திய அரசின் குறிக்கோள் அல்ல என்பதனையும் இவ்நடவடிக்கைகள் தெளிவு படுத்துகின்றன.

இவ்வாறான சுயநல அடிப்படையில் அமைந்த கேவலமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல், விடுதலைப்புலிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களை தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகப் போராடும் போராட்டச் சக்தியாக ஏற்று, தனது வரட்டுக் கௌரவத்தினைக் கைவிட்டு, தனது நலன்களை மட்டுமின்றி தமிழ் பேசும் மக்களின் நலன்களையும் பேணக்கூடிய வகையில் இந்திய அரசு சமாதான முயற்சிகளில் இறங்கியிருக்குமானால் இலங்கைத்தீவில் சமாதானம் நிலை நிறுத்தப்பட்டிருக்கும். இத்தகைய நோக்கு நிலை இந்திய அரசுக்கு இருந்திருக்குமானால் எதுவித நிபந்தனைகளுமில்லாமல் விடுதலைப்புலிகளுடன் பேச தயாராக இருந்திருக்கும்.

இலங்கைத்தீவில் சமாதானமும் அமைதியும் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதனைவிட தனது புவிசார் அரசியல் நலன்களைப் பேணுதலையினையே நோக்காகக் கொண்டு இயங்கிய இந்திய அரசின் இதயசுத்தியற்ற, போலி சமாதான முயற்சிகளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு இதுவரை குறிப்பிட்ட விடயங்கள் உதவும். இந்திய அரசின் இத்தகைய போலித் தனங்களாலேயே விடுதலைப்புலிகளால் இந்திய அரசுடன் எந்தவிதமான உடன்பாட்டுக்கும் வரமுடியாமல் போயிற்று.

இந்திய அரசின் சமாதான முயற்சிகளில் இருந்த போலித் தனங்களை இதுவரை நோக்கினோம். இதன் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கினைத் தொடர்ந்து நோக்குவோம்.

## விடுதலைப் புலிகள் — இலங்கை அரசு பேச்சு வார்த்தை

விடுதலைப் புலிகளை சமரசம் என்ற போர்வையின் கீழ் சரணாகதி அடைய வைக்கும் முயற்சிகளில் தோல்வி கண்ட இந்திய அரசு, வடக்கு-கிழக்கு மாகாண சபை மூலம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் வெற்றிகரமாகச் செயற்படுகின்றது எனும் எண்ணத்தை சர்வதேச அரங்குகளில் ஏற்படுத்தும் முயற்சிகளில் இறங்கியது. ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் அரச நிர்வாகத்தை வெற்றிகரமாக நடாத்த முடியவில்லை. இம் மாகாண சபையின் மந்த நகர்வுக்கு பின்வருவனவற்றை காரணங்களாகக் கூறலாம்.

1. மாகாண சபைகள் மக்கள் மீது திணிக்கப்பட்ட அமைப்பாக இருந்தமை.
2. நிறைவேற்று அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருக்காத ஒரு வெற்றுச் சபையாக மாகாணசபை அமைந்திருந்தமை.
3. விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான கொரில்லா யுத்தமும் மக்களின் ஆதரவுடன் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சிவில் நிர்வாகத்தடையும்
4. மக்கள் உள்ளங்களை வெல்லமுடியாத நிலையில் துப்பாக்கி முனையில் மக்களைக் கையாளும் அணுகுமுறையினை புதிய ஆட்சியாளர்கள் பின்பற்றியமையால் மக்களிடமிருந்து மேலும் அந்நியப்பட்டுப்போனமை.
5. இந்தியாவின் பொம்மை அரசாக மாகாண அரசு செயற்பட்டமை
6. கூடுதல் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு ஒத்துழைப்பு வழங்காமை

இராணுவக் குவிப்பின் மூலம் மாகாண ஆட்சியாளர்களைப் பாதுகாக்கும் பணியினை இந்தியா மேற்கொண்டிருக்கின்ற போதும் வடக்கு-கிழக்குப் பகுதி நிர்வாகத்தை வெற்றிகரமாக செயற்படுத்த எடுத்த முயற்சிகளில் தோல்வி கண்டது. வடக்கு-கிழக்கு மாகாணசபை வெற்றிகரமாகச் செயற்பட்டிருக்குமேயானால், இரத்தம் தோய்ந்த எமது போராட்டத்தைச் சிதைக்க இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்கு அது அடிப்படைப் பலத்தினைக் கொடுத்திருக்கும். இம் மாகாணசபையால் வெற்றிகரமாக நிர்வாகத்தை நடாத்த முடியாமல் போனமையும் அரசியலில் அடுத்த கட்ட நகர்வுக்கான முக்கிய காரணமாக அமைந்தது. இந்திய அரசின் போக்கில் எந்தவித மாற்றங்கள் ஏற்படாதமையும் மக்கள் மீது கொடிய அடக்கு முறைகளில் ஈடுபட்டது மட்டுமன்றி புதிய ஆட்சியாளர்களின் கொடூரங்களுக்கும் இந்திய இராணுவம் துணை நின்றமையும் இந்திய இராணுவத்திற்கு எதிராக தொடர்ச்சியான, விட்டுக் கொடுப்பற்ற ஒரு யுத்தத்தை நடாத்த வேண்டிய தேசியக் கடமையினை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தது.

இந்திய இராணுவத்திற்கு எதிரான தொடர்ச்சியான யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போது, அமைதி காக்கும் படையாக செயற்படாத இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கருத்தும் தமிழ்ப் பகுதிகளில் மேலோங்கியது. (இதே வேளை, சிங்கள மக்களிடையே இந்தியா தொடர்பான வரலாற்றுரீதியான அச்ச உணர்வு மேலும் வலுப்பெற, இந்தியா வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை பல மட்டங்களிலும் எழத் தொடங்கியது. தென்னிலங்கையில் வளர்ந்து வரும் ஆயுதம் தாங்கிய அமைப்பான மக்கள் விடுதலை முன்னணி J.V.P.) இந்தியாவிற்கு எதிரான கருத்துக்களை ஆணித்தரமாக வைத்து, சிங்கள மக்களின் இந்திய எதிர்ப்பலைகளைத் தூண்டிவிட்டு ஒரு பலமுள்ள அமைப்பாக மாற்றம் பெறத் தொடங்கியது) இந்திய இராணுவத்தினரிடையே இயல்பாகச் காணப்படும் முஸ்லீம் எதிர்ப்புணர்வு காரணமாகவும் இந்திய கைக்கூலிக் குழுக்களின் முஸ்லீம் விரோத மனப்பான்மையின் வெளிப்பாடாகவும், இந்திய அரசின், தமிழ்-முஸ்லீம் மக்களை 'பிரித்து ஆளும்' தந்திரரோபாயம் காரணமாகவும் முஸ்லீம் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் இந்திய இராணுவத்தின் துணையுடன் தமிழ்க் கைக்கூலிக் குழுக்களால் நடாத்தப்பட்டமை, இந்திய இராணுவம் தொடர்பான சந்தேகங்களும் அச்ச உணர்வும் முஸ்லீம் மக்களிடையே வளர்வதற்கு ஆதாரமாய் அமைந்தன.

இத்தகைய சூழ்நிலையில், ஜனதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது இந்திய இராணுவத்தை வெளியேற்றுவேன் என வாக்குறுதி அளித்திருந்த ஜனதிபதி பிரேமதாஸாவுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் (J.V.P.) வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தவும் பெரும்பாலான சிங்கள மக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும் இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டிய தவிர்க்க முடியாத தேவை ஏற்பட்டது.

இந்நிலையில்தான், கடந்த ஏப்ரில் மாதம் பத்து நாள் யுத்தநிறுத்தத்தை இலங்கை அரசு ஒரு தலைப்பட்சமாக அறிவித்தது. இந்தியாவின் சம்மதத்தை உரிய முறையில்

பெறுவதற்கு முன்னரே இந்திய இராணுவமும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின அறிவித்தமை இலங்கை இந்திய அரச உறவுகளில் இடைவெளி ஏற்படுவதற்கு முதற்படியாக அமைந்தது எனலாம். இந்த யுத்த நிறுத்தத்தின் போதும் ஆயுதங்களைக் கையளிக்கக் கோரப்பட்டதுடன் மேலும் ஒரு படி சென்று ஆயுதக் கையளிப்பு நிலையங்களும் உருவாக்கப்பட்டன. இந்த ஆயுதக் கையளிப்புக்கான 'வரவேற்பு நிலையங்களில்' தமிழ் சிங்களத் 'தீவிரவாதிகள்' சரணடைந்து ஆயுதங்களைக் கையளித்தால் அவர்களுக்கு 'புனர்வாழ்வு' வழங்கப்படும் எனவும் அறிவித்தல் வெளியாகியது.

இலங்கை அரசின் இந்த யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாக விடுதலைப்புலிகள் இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய பகிங்கரக் கடிதம் மிக முக்கியமான வரலாற்று ஆவணமாக அமைந்தது. இக்கடிதத்தில் மூன்று முக்கிய விடயங்களை விடுதலைப்புலிகள் பிரகடனப் படுத்தியிருந்தனர்.
அவையாவன :-

1. ஆயுதக் கையளிப்புக்குத் தயாராக இல்லை.
2. இந்திய இராணுவம் தமிழ் மண்ணில் இருக்கும்வரை யுத்த நிறுத்தம் என்பதற்கு இடம் இல்லை.
3. தமிழ் பேசும் மக்களின் இறைமையினை எவரிடமும் அடகு வைக்கத் தயாராக இல்லை.

இதே கடிதத்தில் "இந்தியா வெளியேறிய பின்னர் இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் உண்டு என்பதனை நீங்கள் (இலங்கை ஜனாதிபதி) ஏற்றுக்கொள்வீர்கள். அதன்பின் யுத்தமும் வேண்டாம், யுத்த நியுத்தமும் வேண்டாம்" என விடுதலைப் புலிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இத்தகைய அறிவிப்பின் பின்னரும் ஜனாதிபதி பிரேமதாசா எதுவித நிபந்தனையுமற்ற முறையில் பேச்சு வார்த்தை நடாத்த வருமாறு விடுதலைப் புலிகளை நோக்கி அழைப்பு விடுத்தபோது அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டனர். இலங்கை ஜனாதிபதியின் இம்முடிவுக்குப் பல விடயங்கள் காரணமாய் அமைந்துள்ளன.

1. இந்தியப் படைகளை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் தென்னிலங்கை அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தல் கடினமான ஒரு விடயமாகக் காணப்பட்டமை.
2. விடுதலைப் புலிகளுடன் ஓர் இணக்கத்தினை அல்லது இணக்கத்திற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தாமல் இந்தியாவினை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியாமை.
3. இந்திய இராணுவத்தால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்பதனையும், இராணுவரீதியில் போராட்டத்தை நசுக்க முடியாது என்பதனையும், வரலாறு உணர்த்தியமை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பிரதான தடையாக இருந்து வரும் இந்திய இராணுவத்தை தமிழ் மண்ணில் இருந்து வெளியேற்றுவதற்கான அரசியல் நகர்வுகளையும் இராஜதந்திர் ரீதியில் மேற் கொள்ளல் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு அவசியமான தந்திரோபாயமாகக் கருதப்பட்டது. இந்தியப் படைகளை தமிழ் மண்ணில் இருந்து வெளியேற்றுவதற்கான அரசியல் ரீதியான உச்ச அழுத்தத்தினை இலங்கை அரசின் மூலம் பிரயோகித்தல் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலமே சாத்தியமாகும் என்பதனால் போராட்டத்துக்கான தடைகளை அகற்றும் இராஜதந்திர நகர்வின் முதலாம் கட்டமாக இப்பேச்சுவார்த்தை நடாத்தப்படுவதால் இப் பேச்சுவார்த்தை மூலம் எதனையும் இழந்து விடும் நிலையும் விடுதலைப் புலிகளுக்கு இருக்கவில்லை.


விடுதலைப்புலிகள்-இலங்கை அரசுப் பேச்சுவார்த்தைகளின் முதலாம் கட்டம் முடிவடைந்த பின்னர், ஜூலை மாதம் 29ஆம் திகதிக்குள் இந்தியப் படைகள் வெளியேறவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்துள்ளார். இப்பேச்சுவார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கங்களையும் இந்தியப் படைகள் வெளியேற வேண்டும்



பேச்சுவார்த்தைக்காக வவுனியாவிலிருந்து கொழும்புக்கு

பேச்சுவார்த்தைகளில் திரு அன்ரன் பாலசிங்கம் திருமதி அடேல் பாலசிங்கம்




Annexure 'A'

President of Sri Lanka

2 June 1989

My dear Prime Minister,

I am writing to you on some matters of urgent importance. The most immediate matter relates to the presence of Indian Forces in Sri Lanka.

After I assumed the Presidency of Sri Lanka, the Government of India initiated the withdrawal of troops. We are grateful for your prompt action in this regard.

One of the important campaign pledges made by ... the Presidential and Parliamentary ... the IPKF on

பிரேமதாசா ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதம்

என்ற அறிவிப்பின் மூலம் உருவாகியுள்ள நிலைமைகளையும் தொடர்ந்து நோக்குவோம்.

## விடுதலைப்புலிகள் - இலங்கை அரசு பேச்சு வார்த்தையின் தாக்கங்கள்

விடுதலைப்புலிகள் - இலங்கை அரசு பேச்சுவார்த்தை ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி ஆராய்வதற்கு இப்பேச்சு வார்த்தைக்கான அறிவிப்பு வெளியாகிய பின்னரும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கும் போதும் காணப்பட்ட நிலைமைகளை உள்வாங்கிக் கொள்ளல் அவசியமாகின்றது. இப்பேச்சு வார்த்தைகள் தொடர்பாக பின் வரும் விடயங்கள் ஆழ்ந்த அவதானிப்புக்கு உரியவை.

1. எதுவித நிபந்தனைகளுமற்ற முறையில் பேச்சுவார்த்தைகள் என்ற நோக்கு நிலையினை இருதரப்பும் கொண்டிருந்தமை.
2. இப்பேச்சுவார்த்தைகளை வார்த்தையளவில் வரவேற்ற இந்திய அரசு, ஒப்பந்தத்திற்குட்பட்ட முறையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என S.K. சிங் எனும் விசேட தூதுவர் மூலம் வலியுறுத்துயமை.
3. இலங்கை - இந்திய ஒப்பந்த வரையறைக்குள் பேச்சுகள் முடக்கப்படமாட்டாது என இலங்கை அரசு உறுதியான முறையில் வெளிப்படுத்தியமை.
4. இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையிலான உறவுகளில் விரிசல் நிலை ஏற்பட்டமை.
5. இராணுவச்சீருடை அணிந்து, ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகளை, அவர்களின் இருப்பிடம் தேடிவந்து இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் சென்றமை இதுவரை காலமும் எவர்களை 'பயங்கரவாதிகள்' என்று வர்ணித்ததோ அவர்களை போராளிகளாகவும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாகவும் இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டிய சூழ்நிலையினையும் இப்பேச்சு வார்த்தை ஏற்படுத்தியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தபின் அவை தொடர்பாக வெளியிடப்படும் பத்திரிகை அறிக்கையில் 'இந்திய அமைதி காக்கும் படை' என்ற உத்தியோகபூர்வ சொற்பிரயோகத்திற்குப் பதிலாக 'இந்திய இராணுவம்' என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப் படுகின்றமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

இப்பேச்சுவார்த்தைகள் இந்திய அரசுக்கு தர்மசங்கடமான நிலைமைகளை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளன. இந்தியப் படைகள் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கையினை அல்லது 'கட்டளையினை' இலங்கை அரசு உறுதியான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறமை இந்திய இராஜதந்திரத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இவ்வறிவிப்பு இந்தியாவுக்கு ஏற்படுத்தியுள்ள சிக்கல்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறமுடியும்.

இலங்கை ஜனதிபதியின் 'கட்டளை' க்கு இணங்க வெளியேறுவிட்டால் :-

1. அமைதிகாக்கும் படை என்ற முகமூடியின் கீழ் இருந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்பு இராணுவம் என்ற பெயரினைப் பெற்று சர்வதேச அரங்கில் அம்பலமாக வேண்டியிருக்கும்.
2. தன்னைச் சூழவுள்ள சிறிய நாடுகளின் இறைமையினை விழுங்கும் பிராந்திய வல்லரசுப்பூதம் எனும் பெயரினை உறுதி செய்து கொள்ளுவதாக அமைத்துவிடும்.
3. சர்வதேசரீதியில் பிறநாட்டு இராணுவங்கள் வெளியேறவேண்டும் என்ற போக்கு வளர்ச்சியடைந்து வருவதால் தொடர்ந்தும் இலங்கையில் இருப்பதனை நியாயப்படுத்தல் சிரமமானதாக இருக்கும். ஒரு அரசின் அழைப்பின் பேரிலே, அந்த அரசின் ஆதரவுடன் இருக்கும் பிறநாட்டு இராணுவங்களே சர்வதேச அழுத்தம் காரணமாக வெளியேறுகின்ற அல்லது வெளியேறுவதற்கான ஆயத்தங்களைச் செய்கின்ற இன்றைய காலகட்டத்தில், அழைத்த நாட்டின் அரசு வெளியேறச் சொல்லும் போது வெளியேறுது இருத்தல் இந்திய அரசுக்கு சர்வதேச ரீதியில் அவமதிப்பைத் தேடித்தரும்.
4. தமிழ்பேசும் மக்களின் நலன்களைப் பேணுதல் அல்லது தமிழர்களைப் பாதுகாத்தல் என்ற கவசத்தைப் பயன்படுத்தி இலங்கையில் தங்குவதற்கு நியாயம் கற்பிக்க முடியாத அளவுக்கு தமிழ்பேசும் மக்களின் நலன்களை கடந்தகாலத்தில் புறக்கணித்தமையும் தமிழின அழிப்பில் ஈடுபட்டமையும்.
5. இந்தியப்படைகள் வெளியேறவேண்டும் என்ற இந்திய எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளும் இந்தியப் பத்திரிகைகளின் அழுத்தங்களும் வலுவடையும்.
6. தமிழ்பேசும் மக்கள், இந்தியா வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் வெகுஜனப் போராட்டங்களில் ஈடுபடமுடியாத அளவுக்கு இந்திய இராணுவம் தமிழ்ப்பகுதிகளில் குவிக்கப்பட்டிருந்தாலும் சிங்களமக்கள் வெகுஜனப் போராட்டத்தில்

ஈடுபடும்போது அதன் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளமை.

ஜூலை 29ஆம் திகதிக்குள் வெளியேறுவது என முடிவு செய்தால் :-

1. இந்திய வரலாற்றில் காணாத மிகப் பெரிய இராஜதந்திரத் தோல்வியாக இது கருதப்படும்.
2. எந்த நோக்கத்திற்காக இலங்கையின் இனப் பிரச்சினையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோ அதனை பூர்த்தி செய்ய முடியாமல் போவதுடன், உலகில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் எழுப்புவதாக தொடர்ந்தும் தன்னைக் காட்டிக் கொள்வதில் இந்திய அரசுக்கு சிக்கல்கள் தோன்றலாம்.
3. இந்தியாவினைச் சூழ உள்ள ஏனைய சிறிய நாடுகளும் இந்தியாவின் ஆளுமைக்குள் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முனைவதற்கு இந்திப் படைகளின் வெளியேற்றம் ஆக்கம் கொடுப்பதாக அமைந்துவிடும்.
4. இவ்வருட இறுதிக்குள் நடை பெறவேண்டிய பொதுத்தேர்தலில், இவ்விடயம் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் ரீதியாக பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும்.
5. இந்தியாவில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சக்திகளுக்கு இந்தியப்படைகளின் இத்தோல்வி புதிய வேகத்தினையும் மனோபலத்தினையும் அளிக்கலாம்.

ஒட்டு மொத்தமாக நோக்கின், இந்திய அரசினைப் பொறுத்தவரை படைகளை தொடர்ந்து வைத்திருப்பது அல்லது இலங்கையினை விட்டு வெளியேறுவது இரண்டில் எதனைத் தெரிவு செய்தாலும் பெரும் பாதிப்பினையே ஏற்படுத்தும். ஆனால் கௌரவமாக வெளியேறக்கூடிய சூழ்நிலை உருவாகாத போது, அவமானப்பட்டுத் திரும்புவதனை விட தொடர்ந்து படைகளை வைத்திருத்தல் என்ற தெரிவினை இந்தியா மேற்கொள்ளலாம்.

இந்தியா வெளியேறுவதற்கு முன், தனது பொம்மை அரசினைப் இராணுவ ரீதியில் பலப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்ளலாம். இந்த நடவடிக்கை இந்திய - ஸ்ரீலங்கா அரசுகளுக்கிடையில் மேலும் முரண்பாடுகளை வளர்த்துவிடும்.

விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரச பேச்சுவார்த்தைகள் இந்தியாவினை இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருக்கும் நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளது. இப்பேச்சுகள் மூலம் தோன்றியுள்ள நிலைமைகள் எமக்குச் சாதகமாக பயன்படுத்தக்கூடிய வகையில் விடுதலைப்புலிகள் செயற்படுவார்கள் என்று நம்பலாம்.

— திலீபன் —








# போர்ப் புஷ்பங்கள்

அம்மா!
ஒடுங்கிவிட்ட - ஆனால்
ஒளியான உன் கண்கள்,
உன் இயக்கத்தை இம்சிக்கும்
ஈர விறகுகள்,
இடைவிடாத இருமல்,
இதயச் சுவர்களின் இடுக்குகளில்
இடம் பிடித்துக்கொண்ட
அந்த ஆஸ்துமா,
அம்மா........!
என்னை மன்னித்துவிடு!
பாசறையில்
பாதி இரவுகளில்
என் சண்டாள விழிகள்
சயனத்திற்கு சம்மதிக்காதபோது
உன் நேச முகம் வந்து
நினைவுகளைச் சுடுகிறது
என் பெண்மை விழித்து
உன் தாய்மையை தரிசிக்கிறது.



மண்
எனைப் பாதித்தது
கடமை
கைகளைச் சுட்டது
மனத்தின் மெல்லிய பிரதேசங்கள்
மௌனமாக ஓர் பிரளயத்தைப் பிரேரித்தன
வானொலி நாடகத்தில்
வசனமில்லா வேஷமெமக்கு
என்னால்..........
முடியவில்லையேயம்மா..........!
அதனால் தான் - உன்
கைகளைக் கடந்து
கன தூரம் வந்துவிட்டேன்

நீ
சிறகுகளுக்குள் சிநேகமாய்
கூட்டி வளர்த்த இக்குயில்
இன்று,
தேசயுத்தத்தில் ஒரு
சுதந்திரப் பறவை

அம்மா!
என்னைப் புரிந்துகொள்
நீயோ - என்
வயதிற்தாய் வருத்தப்படுகிறாய்
நானோ - ஒரு
வம்சத்திற்காய் வழக்காடுகிறேன்

அனல் வீசும்
அராபிய நிலங்களில் - என்
சுயம்வரத்திற்காய்
சொத்துச் சேர்க்கும்
சோதரனுக்கு கூறிவிடு
வழமிழந்த மண் மீட்டே - என்
வசந்தங்களுக்கு வரவு என்று!

என்னோடு இன்னும்
எத்தனை தோழியர்கள்
நாம்
கனவுகளை அல்ல
கனரக ஆயுதங்களை சுமக்கும்
காவல்க் கன்னியர்கள்
புதிய பூபாளத்திற்காய்
புறப்பட்ட
போர்ப் புஷ்பங்கள்!!



# தமிழர் எழுச்சியின் வடிவம்

ப. நெடுமாறன் M.A. தலைவர், தமிழர் தேசிய இயக்கம்



"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில், வானோடு முன்தோன்றி மூத்த குடி" என புகழ்பெற்ற வீரக்குடியினராகத் தமிழர்கள் சிறந்திருந்தார்கள். இமயவர்மன் நெடுஞ்சேரலாதன், சேரன்செங்குட்டுவன், ஆரியப்படை கடந்த காண்டியன் நெடுஞ்செழியன், கரிகால் பெருவளத்தான், இராஜராஜசோழன் இராஜேந்திரசோழன் என மன்னாதி மன்னர்கள் பலர் தங்கள் வீரத்தால் தமிழனின் பெருமையை இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும், அதற்கப்பால் மேற்கே ரோமாபுரியிலிருந்து கிழக்கே சீனம்வரையிலும் பரப்பியிருக்கிறார்கள்.

பொற்கோட்டு இமயத்தில் விற்கொடியைப்பொறித்து தமிழனின் வீரத்தை உலகறிய செய்த சேரன்செங்குட்டுவனின் படைத்தளபதியாக விளங்கியவன் வில்லவன்கோதை.

உத்தரபாரதத்தின் ஏக சக்ரவர்த்தியாக விளங்கிய **ஹர்ஷவர்த்தனன்** தென்னகம்நோக்கிப் படையெடுத்தபோது அவனைத் தோற்கடித்த பெருமைக்குரியவன் சளுக்கியமாமன்னன் புலிகேசி. அத்தகைய பேராற்றல் படைத்த பெருவீரரான புலிகேசியை முறியடித்து அவனின் தலைநகரமான வாதாபியை அழித்த மாமன்னச் சக்ரவர்த்தியின் படைக்குத் தளபதியாக விளங்கியவன் பரஞ்சோதி.

அசோக சக்ரவர்த்தியினாலேயே வெல்லமுடியாத கலிங்கத்தை வென்றான் குலோத்துங்கச்சோழனின் படைத்தளபதியாக விளங்கிய கருணாகரத் தொண்டமான். தமிழர்களின் வீரவரலாறு விவரிக்கும் அழிக்கமுடியாத உண்மைகள் இவை

பழமையும், பெருமையும்மிக்க தமிழர் வரலாற்றுக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுக்காலமாக எத்தனையோ பேர் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

ஆனால் இது எல்லாம் பண்டையப்பெருமையாய், பகற்கனவாய் மறைந்துவிட்டன. எந்தெந்த நாடுகளில் தமிழன் வெற்றிக்கொடி நாட்டினானோ அந்தந்த நாடுகளிலேயே தமிழன் கொத்தடிமையாகச் சென்று வாழத் தொடங்கினான். தமிழர்கள் என்றாலே நல்ல கொத்தடிமைகள் என்று உலகம் கருதியது. அடிமைச் சேற்றில் நெளியும் புழுக்களாக புறநானூற்றுத் தமிழர்கள் ஆன இழிநிலை வந்தது. அடிமை வாழ்வினைத் தமிழன் விதியென நினைத்து ஏற்றுக்கொண்டான்.

"விதியே விதியே தமிழச்சாதியே என்செய நினைத்தாய்" என மகாகவி பாரதி மனம்நொந்து பாடும் அளவுக்கு தமிழனின் நிலை தாழ்ந்தது.

வெள்ளையனை எதிர்த்து வீரபாண்டியகட்டபொம்மனும், ஊமைத்துரையும்,

வீரமருது சகோதரர்களும் போராடியபோது தமிழர்கள் உறங்கிக் கிடந்தார்கள். அந்த மானறவர்களின் வீரப்போராட்டத்திற்குப் போதுமான ஆதரவளிக்கவில்லை. கோழைகளாகிவிட்ட தமிழர்களுக்குநடுவே வாழ்வதைவிடத் தூக்கிலே தொங்கி மடிவதேமேல் என அம்மாவீரர்கள மாண்டுபோனார்கள். அதற்குப்பிறகு தமிழர்கள் எவரேனும் ஆயுதம் தூக்கிப் போரடத் துணியவில்லை. இந்தியாவின் சுதந்திரப்போராட்டம் நடைபெற்றவேளையில்கூட தமிழகத்தில் ஆயுதப் புரட்சி உருவாகவில்லை.

வ.உ.சி.யும், பாரதியும் ஊட்டிய தேசபக்திக்கனல் ஒரே ஒரு வீரவாஞ்சிநாதனை தோற்றுவித்தது.' ஆனால் அப்போதும் தமிழகம் கிளர்ந்தெழவில்லை.

அச்சமும் பேடிமையும் அடிமை சிறுமதியும்
உச்சத்திற் கொண்டா ரடி! - கிளியே!
ஊமைச் சனங்க ளடி!

என பாரதி சித்தம் நொந்தான்.

பகற்கனவாகப் போய்விட்ட இந்தப் பழம்பெருமைகளுக்கு மீண்டும் உயிர்கொடுத்து, முதன்முதலாகத் தமிழர்களே நடத்தும் ஆயுதப்புரட்சிக்கு வித்திட்டு அதற்குத் தலைமைதாங்கியிருப்பவர் 'தம்பி' பிரபாகரன் ஆவார். இதன்மூலம் தமிழ்க்குலம் வீரத்தளபதி எவரையும் தோற்றுவிக்கவில்லையே என்ற குறையை பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு பிரபாகரன் போக்கி இருக்கிறார்.

உலகில் தமிழனக்கென்று ஒரு தனிநாட்டினை அமைக்கும் திருப்பணிக்காக தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக்கொண்டுள்ள தியாகப்படை ஒன்றை அமைத்து அதனை வழிநடத்திச் செல்கிற பிரபாகரன் தமிழர் வரலாற்றில் இதுவரை யாரும் கண்டும் கேட்டறியாத அற்புத சாதனையைப் புரிந்திருக்கிறார்.

விடுதலைக்காகப் போரடிய பல்வேறு நாடுகளில் பல தலைவர்கள் இத்தகைய விடுதலைப்படைகளை அமைத்தது உண்டு. ஆனால் அவர்களுக்கெல்லாம் ஏதேனும் ஒரு நாடோ, அல்லது பல நாடுகளோ உதவி புரிந்தன. இந்தியாவின் மாபெரும் தலைவரான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறினார். அந்த நிலையிலேயே அவர் உல்கமறிந்த தலைவர். ஜெர்மனியும், ஜப்பானும் அவருக்கு உதவிசெய்ய போட்டுப் போட்டுக்கொண்டு முன்வந்தன. இந்திய மக்களின் மாபெரும் தலைவராக ஏற்றுக்கொள்ளபட்ட அவருக்கு உலகத்தில் இரண்டு பெரிய வல்லரசுகள் என்னென்ன உதவிகள் தேவையோ அந்த உதவிகளைச் செய்துகொடுத்தன. பிரிட்டிஷ் இந்தியராணுவத்தில் பணியாற்றி ஜப்பானியர்களால் சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த இந்தியப் போர்வீரர்களை மீட்டு அவர்களைக்கொண்டு இந்தியத் தேசிய இராணுவத்தினை நேதாஜி சிங்கப்பூரில் உருவாக்கினார். இந்த இராணுவத்திற்குத் தேவையான ஆயுதங்கள் மற்ற உதவிகள் ஆகியவற்றை ஜப்பான் கொடுத்தது. நேதாஜியின் சுதந்திர அரசை ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி மற்றும் நட்பு நாடுகள் அங்கீகரித்தன.

நேதாஜியை தனது வழிகாட்டியாகக் கொண்டிருக்கிற அருமைத்தம்பி பிரபாகரனுக்கு திக்கற்ற தமிழ் இளைஞர்கள் மட்டுமே துணைநின்றனர். வேறு எந்த நாடும் எந்த வல்லரசும் அவருக்கு உதவிபுரிய முன்வரவில்லை. ஆனால் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் அள்ளித் தரும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கக்கூடிய சிங்களராணுவத்தை ஓட ஓட விரட்டியடிக்கிற விடுதலைப்படையை பிரபாகரன் உருவாக்கியவிதம் கற்பனைக்கு எட்டாதது. அதைப் போலவே வலிமைவாய்ந்த இந்திய இராணுவத்தை எதிர்த்து அவர் நடத்திக்கொண்டிருக்கும் வீரப்போரட்டமும் கனவிலும் எண்ணிப்பார்க்கமுடியாதது இதை எப்படி அவர் சாதித்தார்? இன்னமும் புரியாத புதிர்தான். தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும் இன்னும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் தருகிற சிறுசிறு உதவிகளைப்பெற்று அவற்றைக் கொண்டு ஆயுதங்களை வாங்கி தனது போராட்டத்தை அவர் தொடர்ந்து நடத்துகிறார். இராணுவ பலம்மிக்க ஒரு எதிரியை எதிர்த்து மக்கள் பலத்தைத்தவிர வேறு எந்த பலமுமில்லாமல் போராடிவரும் அவரது துணிவுக்கு ஈடுயிணையே இல்லை.

தமிழீழத்தில் சுற்றுப்பயணங்கள் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அறிந்ததன்விளைவாக எனக்கு ஒரு உண்மை தெளிவாகப் புரிந்தது. தமிழீழ விடுதலைப்போரின் முன்னணிப் படையாக விடுதலைப்புலிகளின் இயக்கம் திகழ்கிறது. அரசியல் அறியாத சிறுவர்களாக அவர்களைக் கருதுவதும், அவர்களின் முயற்சி வெறும் தற்கொலைக்கு ஒப்பாகும் என்றெல்லாம் சிலர் பேசிவருவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நான் நேரில்கண்டேன்.

வியட்நாம் விடுதலைப்போராட்டத்தை அந்நாட்டு மக்கள் உறுதியாக நடத்தியதைப்போல தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகள் வீறுகொண்டு நடத்துகிறார்கள். இதை ஒரு மக்கள் போராட்டமாக மாற்றி

வருகிறார்கள். மக்களின் துணையோடு தங்கள் விடுதலைப் போராட்டத்தை அவர்கள் விரிவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப்புலிகளின் வீரப்போராட்டத்தின் விளைவாக சிங்கள இனவெறி ஆட்சியின் அத்திவாரம் ஆட்டம் கண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் முன்னின்று நடத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்மூலம்தான் தமிழினம் தன்னை முழுமையாக உணரத்தொடங்கியுள்ளது. ஜாதி, மதம், கட்சி போன்றவற்றால் பிளவுபட்டுக் கிடந்த ஈழத்தமிழ் இனம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினால்தான் ஒன்றுபட முடிந்திருக்கிறது. உலகம் பூராவிலும் உள்ள தமிழர்களுக்கு எழுச்சியையும், உணர்ச்சியையும் ஊட்டுகிற ஒரு போராட்டமாகவும் அவர்களை ஒன்றுபடவைக்கிற ஒரு போராட்டமாகவும் இப் போராட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

எந்தவொரு நாட்டின் விடுதலைப் போராட்டமும் தகுந்த தேசியத் தலைமையின் வழிகாட்டல் இன்றி வெற்றிபெற்றதில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் இது பொருந்தும். இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முற்றிலும் தகுந்த தேசியத் தலைமையை விடுதலைப்புலிகளின் இயக்கம் தம்பி பிரபாகரன் வடிவத்தில் தந்துள்ளது. தமிழீழ மக்களும் இதை மனமுவந்து ஏற்றுக்கொண்டுள்ளனர். நானே நேரில்கண்ட உண்மை இது. 1985ஆம் ஆண்டு அக்டோபர் நவம்பர் மாதங்களிலும் 1987ஆம் ஆண்டு செப்டம்பரிலும் தமிழீழப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்து பலதரப்பு மக்களையும் கண்டுபேசி அவர்களின் உள்ளத்து உணர்வுகளைப் புரிந்துகொண்டபிறகே இதை எழுதுகிறேன்.

தம்பி பிரபாகரன் அவர்களைத் தமிழீழ மக்கள் தங்களது தவப்புதல்வனாகக் கருதுகிறார்கள். மனமார நேசிக்கிறார்கள். சிங்கள அரக்கர்கள் கொடுமைகளில் சிக்கித்தவித்து அடிமை இருளில் தடுமாறிக்கொண்டிருந்த தங்களின் வாழ்வில் தோன்றிய நம்பிக்கை நட்சத்திரமாக அவரைக் கருதுகிறார்கள்.

தமிழீழமக்கள் தங்கள் நாடு முழுமையாக விடுதலை பெற்றால் ஒழிய தங்களுக்கு வாழ்வில்லை என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அறவழியில் அதை அடைய முடியாது என்பதைக் கடந்த 30 ஆண்டுகால அனுபவம் அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. சமரசப்பேச்சுகள் அவர்களைச் சுதந்திர மனிதர்களாக்காது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு இழப்பு, இவ்வளவு அழிவு, இவ்வளவு தியாகத்திற்குப்பின் இனி ஒருபோதும் பின்வாங்கமுடியாது. விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர வேறுவழியில்லை என்பதை ஐயந்திரிபர உணர்ந்திருப்பதோடு அவ்வாறு செய்வதற்குத் தகுதியானவர் பிரபாகரனே என்பதையும் அறிந்திருக்கிறார்கள்.

> இதனை இதனால் இவன்முடிக்கும்
> என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்.

என வள்ளுவர் வாக்கின் பொருளை நன்குணர்ந்த ஈழமக்கள் தங்கள் தாயக விடுதலை என்னும் அரிய செயலை முடிக்க தக்கவன் பிரபாகரனே என்பதைத் தெளிந்து தேர்ந்து அவர் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தனது சொந்த உறுப்பினர்களைக்கூட கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியாத இயக்கங்களையும் தலைமைகளையும்கண்டு மனம்வெறுத்துப்போன தமிழீழ மக்கள் அவற்றோடு புலிகள் இயக்கத்தை ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்தபிறகே இத்தகைய முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

கட்டுப்பாடு, ஒழுக்கம் இவற்றோடு தியாகமும், வீரமும் நிறைந்தவர்களாகப் புலிகளை மக்கள் கருதுகிறார்கள்.

மக்களால் வளர்க்கப்படும் மக்கள் இயக்கமாகப் புலிகள் இயக்கம் வளர்ந்திருக்கிறது. மக்களின் ஒத்தழைப்போடு தங்கள் போராட்டத்தை மக்கள் போராட்டமாகப் புலிகள் மாற்றியுள்ளனர்.

அடிமைச்சேற்றில் நெளியும் புழுக்களாகத் தமிழர்களைக் கருதியவர்கள் இன்று அவர்கள் புலிகளாக மாறி உறுமுவதைக்கண்டு கிலிகொண்டு நடுங்குகின்றனர். விடுதலைப்புலிகளின் வீரத்தினாலும், தியாகத்தினாலும் தமிழினமே தலைநிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு வழிவகுத்தவர் பிரபாகரனே.

காலங்காட்டும் இந்த உண்மைகளை உணராது தனது இராணுவ பலத்தைக்கொண்டு பிரபாகரனையும், விடுதலைப்புலிகளையும் அழித்துவிட பிரதமர் ராஜிவ் முயலுவது பேதமையாகும். இந்தநோக்கம் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை.

தாங்கள் சிந்தும் இரத்தத்தினால் ஈழமண் சிவந்துகொண்டே இருந்தாலும், வங்கக்கடல் செங்கடலானாலும் பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்களின் இலட்சியக்கனவு நிறைவேறும்வரை போராடுவார்கள். தமிழீழத்தின் சுதந்திரக் கொடியை ஏற்றும்வரை தொடர்ந்து போராடியே தீருவார்கள். அவர்களுக்குக் காலம் இட்டிருக்கிற கட்டளை இது. அதை மீற எவராலும் இயலாது.



# வீர வணக்கம்

வாழ்க்கையை —
விடுதலைப் போரினாலும்
மரணத்தை —
அஞ்சாத தியாகத்தாலும்
கடைசி வரைக்கும்
கனப்படுத்தி,
பூமி கனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை...
யுகங்களின் நெற்றியில்
உமது திருப் பெயர்....

நாளைய மானுடப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்கள் உயிரின்
வாசம் கமழும்...

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்களில்
நிச்சயம் உமது
உயிரின் சூடும்
ஒன்றித்திருக்கும்

துரோகத் தூசுப் படலத்தை
உயிரின் சுவாலையால்
பொசுக்கிய புலிகளே!
காலியான சயனைட் குப்பிகளும்
கழன்று கிடக்கும் தோள் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத இளைய ரத்தமும்...
அனைத்திலும் மேலாய்
உம்
வாழ்வும் மரணமும்,
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்!
ரத்த சாட்சிகளே!
வீரவணக்கம்

கவிஞர் இன்குலாப்

# விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை வரலாற்றை முன்னேற்றுவதற்கான ஒரு ராஜதந்திர நடவடிக்கையே

விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தைகள் தமிழீழவிடுதலைப்போராட்ட வரலாற்றில் ஆழமான திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு சிறந்த ராஜதந்திர நடவடிக்கையாக அமைகின்றது. ஆனால் இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தமிழ்பேசும் மக்களில் சிலரிற்கு சில சந்தேகங்களும், குழப்பங்களும் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் காணப்படுகின்றன. பின்வரும் வினாக்களின் அடிப்படையில் இவை ஏற்படலாம்.

1. இனவாத அரசான ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா?
2. ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்களிற்கு உரிமைகளை வழங்குமா?
3. இந்தியாவினை முற்றுமுழுதாகப் பகைக்கலாமா?
4. இந்தியா வெளியேறியபின் ஸ்ரீலங்கா ராணுவம் தமிழ் பேசும் மக்களிற்கு எதிராக இனப்படுகொலைகளை மேற்கொள்ளுமானால் என்ன செய்வது?

இத்தகைய வினாக்கள் வரலாற்றுப்படிப்பினை காரணமாக எழுவது இயல்பானதே. இன்றைய கால கட்டத்தில் இவற்றிற்கான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மிக அவசியமானது.

## 1. இனவாத அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா?

இன்று விடுதலைப்புலிகள் சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை சர்வதேச நிலமைகளுடன் இணைத்து நோக்கினாலே இக்குழப்பத்திற்கான தெளிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்று சர்வதேச அரங்கில் முரண்பாடுகளை பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்து மேலோங்கி வளர்ந்து வருகின்றது. இக்கருத்தின் வளர்ச்சிப் போக்கில், எவர்கள் பேச்சுக்கள் மூலம் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு கூடுதலான முன்னெடுப்புக்களைச் செய்கின்றார்களோ, அல்லது அவ்வாறு செய்வதாகக் காட்டிக் கொள்கின்றார்களோ அவர்களே சர்வதேச ஆதரவினையும் அனுதாபத்தினையும் தம்பக்கம் திருப்பிக் கொள்ளக் கூடிய நிலமை உருவாகியுள்ளது. நாடுகளிற்கிடையேயான பிரச்சினையாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு நாட்டுக்குள்ளேயான தேசிய இனப்பிரச்சினையாகவோ, அல்லது வர்க்கப்பிரச்சினையாகவோ இருந்தாலும் சரி அப்பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட தரப்பினர் இந்த சர்வதேச அழுத்தத்திற்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இத்தகைய ஒரு சூழ்நிலையும்தான் எதிரும் புதிருமான அமெரிக்க சோவியத் அரசுகளும் ஆயுதக்குறைப்பு தொடர்பான பேச்சுக்களை நடத்த வேண்டிய நிலமையினை ஏற்படுத்தியது எனலாம். (இப்பேச்சுக்களிற்கு இவ்விரு வல்லரசுகளினது நலன்களும் காரணமாக அமைந்துள்ளன). முற்போக்கு சோசலிச கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கருதப்படும் சோவியத் யூனியன், (சோவியத் யூனியனின் சோசலிசக் கொள்கைகள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியது). சர்வதேச பயங்கரவாதத்தின் சூத்திரதாரியாகக் கருதப்படும் அமெரிக்காவுடன் பேச்சுக்கள் நடத்தலாமா என்ற கேள்வியே எழாத வகையில் இப்பேச்சுவார்த்தைகள் உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.


மேலும், குறிப்பாக தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாக தனிநாடு கோரி போராடும் போராட்ட சக்திகளை 'பிரச்சனையை பேசித்தீர்த்தல்' எனும் அடிப்படையில் அமைந்த சர்வதேச அழுத்தம் வெகுவாகப்பாதிக்கின்றது. எந்தவித பேச்சுவார்த்தைகளையும் நிராகரித்து தத்தமது மக்களிற்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலமை உலகின் பல்வேறு போராட்டச்சக்திகளிற்கும் உருவாகியுள்ளது. இஸ்ரேல் என்ற நாடு இருப்பதையே எதிர்த்துவந்த பலஸ்தீன விடுதலை இயக்கம், இன்று இஸ்ரேலின் இருப்பிற்கு அங்கீகாரம் அளித்துவிட்டு, பலஸ்தீன அரசினைப் பிரகடனப்படுத்தியதோடு இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்டிருக்கும் அரபுப்பிரதேசங்களிற்கும் உரிமைகோரி, இதுதொடர்பாக இஸ்ரேலுடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராகி இருப்பது ஓர் மிகச்சிறந்த ராஜதந்திர நடவடிக்கையாகக் கருதப்படுவதும் இன்றைய சர்வதேச அழுத்தத்தை தங்களிற்கு

சாதகமாகப் பயன்படுத்தியமையால்தான்.

இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில்தான் சிங்கள இனவாதம் காரணமாக தேசிய அடிப்படையில் முரண் பாட்டினைக் கொண்டிருக்கும் இரு சக்திகளான விடுதலைப் புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தையினை நோக்க வேண்டும்.

சர்வதேச அபிப்பிராயத்தை எமக்குச்சாதகமாக வென் றெடுத்தல் என்பதோடு இந்தியப்படைகளை வெளியேற்று வதற்கான சூழலை உருவாக்கவும் இப்பேச்சுவார்த்தை அவசி யமாக உணரப்பட்டது. தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தினை ஒப்பந்தம்மூலம் நசுக்க முயன்று, அதிற் தோல்வி கண்டதன் பின்னர் ராணுவப் பயங்கரவாதம் மூலம் தமிழ்த்தேசிய எழுச்சியினை நசுக்க முற்படும் இந்திய அரசின் படைகள் வெளியேற்றப்படுவது தமிழ்பேசும் மக்களின் தரப்பில் அத்தியாவசியமாக இருக்கும் அதே வேளை, சிங்கள மக்களின் இறைமையினைப் பாதுகாக்கவும், இந்திய ஆக்கிரமிப்பு தொடர்பான அச்ச உணர்வு காரணமாகவும் சிங்களமக்களும் இந்தியப்படைகள் வெளி யேற்றப்படு வதை வலியுறுத்துகின்றனர்கள்.

'இந்தியப்படைகளை வெளியேற்றுதல்' என்பதில் உள்ள அடிப்படை ஒற்றுமை விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை இடம் பெறுவதற்கான அத்திவாரத்தினை அமைத்துக் கொடுத்தது எனலாம். ஒரு பொதுநோக்கத்திற் காக இரு முரண்பட்ட சக்திகள் பேச்சுக்களில் ஈடுபடுவது வரலாற்றிற்கு ஒன்றும் புதியதல்ல.



யப்பானியர்கள் சீனாவினை ஆக்கிரமித்தபோது, நிலப் பிரபுத்துவத்தை தகர்த்தெறிந்து புதியதோர் சமூகத்தை அமைக்க புரட்சிகர யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாவோ-சே-துங்கும், நிலப்பிரபுத்துவத்தை தாங்கி நின்ற அரசிற்கு தலைமைவகித்த 'சியாங்கேஷே' யுடன் யப்பானி யர்களிற்கு எதிராக தேசியயுத்தத்தை நடத்த யுத்தத்தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு வந்த நிகழ்வும், விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை நிகழ்வும் வரலாற்று ஒற்றுமைத் தன்மையினைக் கொண்டுள்ளன. பிற்போக்கு அரசுடன் உடன்பாட்டிற்குப் போவதா என மாவோ யுத்தத்தவிர்ப் பிற்கு மறுத்திருந்தால் மாவோவின் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றிப்பாதைக்குச் சென்றிருக்குமா என்பது சந்தேகத் திற்குரியதே. சூழ்நிலைகளிற்கேற்ப பொருத்தமான, தேவை யான அரசியல் நகர்வுகளை தந்திரோபாய ரீதியில் மேற் கொள்ளல் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க அவசியமானது என்பதனை சீன உதாரணம் நிரூபிக்கின்றது.

எமது வரலாற்றினை முன்நோக்கி நகர்த்துவதற்கான சூழ் நிலையினை உருவாக்கமுடியும் என்பதன் அடிப்படை யிலேயே விடுதலைப்புலிகள் சிங்கள அரசுடனை இப்பேச் சுக்களை ஓர் ராஜதந்திர நகர்வாக மேற்கொள்கின்றனர். எனவே இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இனவாத அரசுடன் பேசலாமா என்ற ரீதியில் குழப்பமடைவது அர்த் தமற்றது.

## 2. ஸ்ரீலங்கா அரசு தமிழ்பேசும் மக்களிற்கு உரிமைகளை வழங்குமா?

எமது கடந்தகால வரலாற்றின் அடிப்படையில் பலரிற் கும் இந்தசந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாததே. ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் கடந்தகால ஏமாற்று நடவடிக்கைகள் இப்பேச்சுவார்த்தைகளில் ஒரு பலத்தை விடுதலைப்புலி களிற்குக் கொடுத்துள்ளது என்பதனை சற்று ஆழமாக நோக் கினால் புரிந்துகொள்ளமுடியும்.


சிறிலங்கா அரசின் வெறும் வாக்குறுதிகளை நிகாரிப் பதற்கும் சட்டமாக்கப்படவேண்டிய விடயங்கள் சட்டமாக் கப்படுவது மட்டுமின்றி நடைமுறையில் நிறைவேற்றப்படு கின்றதா என்பதனை உறுதிசெய்யும் வரை விட்டுக்கொடுப்பு களை தவிர்த்துக்கொள்வதற்கும் சிறிலங்கா அரசுகளின் கடந்த கால ஏமாற்று வரலாற்றை ஆயுதமாக விடுதலைப் புலிகள் உபயோகிக்க முடியும். மேலும் பேச்சு வார்த்தை களில் கலந்து கொள்வதற்காக எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்களையும் விடுதலைப்புலிகள் செய்யவில்லை.

"தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளை சமதர்ம தமிழீழம் மூலமே தீர்க்க முடியும்; ஆனால் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய மாற்றுத்தீர்வினை எவரும் முன்வைத்தால் அதனைப்பரிசீலிக்க தயாராக இருக் கின்றோம்" என இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தங்களின் நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தனர். இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சிறிலங்கா அரசு முன்வைக்கும் தீர்வு முறை விடுதலைப்புலிகளினால் அணுகப்படும் என்று பலரா லும் அனுமானிக்கப்படுகின்றது.

ஆனால் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வுமுறைக்கு சிறிலங்கா அரசால் போகமுடியுமா எனும் சந்தேகமும் பலரால் எழுப்பப்படு கின்றது. மக்கள் விடுதலை முண்ணனியினரின் (J.V.P) அரசியல் இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்தும், பௌத்தபிக்குகளின் அரசியல் செல்வாக்குகளை நிராகரித்தும் இனவாதிகளின் எதிர்ப்புக்குரலை மீறியும், சிறிலங்கா ஜனாதிபதியினால் செயற்படமுடியுமா என்ற தர்க்கத்தின் அடிப்படையில் இச் சந்தேகம் எழும்பியுள்ளது..

இன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு வரலாறு சில உண்மைகளை உணர்த்தியிருக்கும்.

1. தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்காது அவர்களை இரண்டாந்தர பிரசைகளாக தொடர்ந்து வைத்திருக்க முனைந்தால் அது இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்பு வாதத்தினை நியாயப்படுத்துவதற்கு இந்திய அரசுக்கு வாய்ப்பினைக் கொடுத்துவிடும் என்பது.
2. உலகின் நாலாவது ஆவது பெரிய இராணுத்தினாலேயே அழிக்க முடியாத அளவுக்கு பலத்தினையும் உறுதியையும் கொண்ட விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் சிறிலங்கா படையால் வெற்றி கொள்ளமுடியாது என்பது.
3. இந்தியாவுடன் இணைந்து சிங்கள மக்கள் மீதான ஆக்கிரமிப்பினை தமிழர்கள் மேற்கொண்டுவிடுவார்கள் என்ற அச்சம் அர்த்த மற்றது என்பது



4. பதவிகளையோ, அல்லது சலுகைகளையோ வழங்கி விடுதலைப்புலிகளை விலைபேசமுடியாது என்பது

இந்த உண்மைகள் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அர்த்தமுள்ள தீர்வு ஒன்றை முன்வைப்பதற்காக இலங்கை ஜனாதிபதியினை செயற்பட வைக்கலாம். அவ்வாறு சிறிலங்கா அரசால் உரிய தீர்வுமுறைக்கு போகமுடியாவிட்டால் தமிழீழமே தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்கான தீர்வு முறை என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு உறுதியாக நிருபணமாகின்றது.

இது மட்டுமின்றி, மேடை அரசியலை நடத்தி, பேச்சுவார்த்தைகளை நடத்தி பேச்சுவார்த்தைகளை அரசியல் இருப்பிற்கான விடயமாக கருதும் சத்திகளைப் போலன்று தமது பலத்தினையும் உறுதியினையும் உணர்த்தியபின்னர், இந்தியா வெளியேறும் வரை யுத்த நிறுத்தம் என்பதற்கே இடமில்லை என்று பிரகடனப்படுத்திய போர்க்குணம்சம் கொண்டவர்களாகவே விடுதலைப்புலிகள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றனர். உயிர்வாழ்வதற்கு கவசமாக பயன்படுத்துவதனை நோக்கமாக கொண்டோ அல்லது பலவீனத்தின் வெளிப்பாடாகவோ அவர்கள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.

எனவே, சிறிலங்கா அரசு உரிமைகளை வழங்காது விடின் தமிழீழம் என்ற தேவையின் அவசியம் உறுதிப்படுத்தப்படுவதற்கு இப்பேச்சுவார்த்தைகள் பயன்படும். தமிழீழம் உருவாகுவதினை தனது நலன்களுக்காக தடுத்துவரும் இந்தியாவின் படைகளை வெளியேற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கும் இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகள் கலந்து கொண்டமை எமது போராட்டத்தின் வெற்றிக்கு வழிசமைப்பதாக அமையும் என உறுதியாக நம்புவோம்.

## 3. இந்தியாவை முற்றுமுழுதாக பகைக்கலாமா?

தற்போதைய இந்திய அரசினையே முழு இந்தியாவாக பார்க்கும் தவறான பார்வை காரணமாகவே இக்கேள்வி எழுகின்றது. இந்திய மக்கள் மனதில் இருந்து அந்நியப்பட்டுச்செல்லும் ஓர் அரசாகவே இன்றைய இந்திய அரசு விளங்குகின்றது. இந்திய தேசத்தின் ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கும் இந்திய மக்களையும், மக்களின் குரலாக வெளிவரும் பத்திரிகைகளையும், இந்திய எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கியதாகவே நாம் இந்தியாவை நோக்க வேண்டும்.

இந்திய மக்களையும், பத்திரிகையாளர்களையும், இந்திய தேசத்தையும் நேசசக்திகளாகவே விடுதலைப்புலிகள் கருதி வந்திருந்தனர். விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் தங்கியிருந்த போது மக்கள் விரோத நடவடிக்கைகள் எதிலுமே ஈடுபடவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் காரணமாக ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்ட போது, "இந்திய மக்களை நேசிப்பதன்காரணமாக, இந்திய படைகளுடன் மோத நாம் விரும்பவில்லை. இதனால் ஆயுதங்களை ஒப்படைக்க தீர்மானிக்கின்றோம்." என விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நாலாம் திகதி சுதுமலையில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார். இந்திய அரசின் தவறான போக்கால்,

தம்மீது திணிக்கப்பட்ட யுத்தத்தினை எதிர் கொண்ட பின்னரும் இந்திய மக்களை நேசிக்கின்றோம் என்பதனை விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தி வருகின்றனர். தாம் கைது செய்த 18 இந்திய இராணுவத்தினரை விடுதலை செய்த போது, இந்திய மக்கள் மீது கொண்ட நல்லெண்ணம் காரணமாக இந்திய ஜனநாயகம் இறந்துவிடாமல் இருப்பதற்காக உழைத்துக்கொண்டு இருக்கும் இந்திய பத்திரிகையாளர்கள் முன்னிலையில் இந்திய இராணுவத்தினரை விடுதலை செய்கின்றோம் என விடுதலைப்புலிகள் குறிப்பிட்டு

புக்கள் நிறையவே உள்ளன. பல இந்தியப்பத்திரிகைகள் இலங்கைப்பிரச்சனையில் இந்திய அரசின் போக்கை காரசாரமாக கண்டித்து வருகின்றனர். குர்திப்நாயர் போன்ற பிரபல இந்திய பத்திரிகையாளர்களும் இந்திய படைகள் வெளியேற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். இலங்கையில் போரிட்டுக்கொண்டிருக்கும் இந்தியப்படை வீரர்களின் விரக்திகலந்த, தோல்விமனப்பான்மையை வெளிப்படுத்தும் வாக்கு மூலங்களும் இந்திய பத்திரிகைகளில் இடம்பெற்று வருகின்றன.









இருந்தனர். இது மட்டுமின்றி இந்திய எதிர்க்கட்சிகளுடனும் இலங்கை இனப்பிரச்சனையில் இந்திய அரசின் தவறான அணுகுமுறை குறித்து பேச்சுக்கள் நடத்தியிருந்தனர். இவ்விடயங்களில் இருந்து இந்திய தேசத்தை விடுதலைப்புலிகள் பகைநாடாகக் கருதவில்லை என்பதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

தேசநலன்களை பேணுவதாகக் கூறிக்கொண்டு இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் ஈழத்தமிழ் பேசும் மக்களின் நலன்களை புறக்கணிக்கும் தன்மைகளைக் கொண்டிருப்பதோடு இந்திய தேசத்தின் நலன்களையும் பாதிக்கக்கூடிய தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றது என்பதனை இந்திய மக்கள் இன்று உணர்ந்து வருகின்றனர்.

அண்மையில் ஒரு இந்திய ஆங்கில சஞ்சிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின் படி 59.6 வீத இந்தியமக்கள் இந்தியபடைகள் இலங்கையினை விட்டு வெளியேர வேண்டும். என விரும்புகின்றார்கள் எனத்தெரிய வந்துள்ளது இவ்வீதம் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்

இதுவரை காலமும் இந்தியா ஈடுபட்ட யுத்தங்களான இந்திய-பாகிஸ்தான் யுத்தங்களும், இந்திய-சீன யுத்தமும் இந்தியாவின் தேசிய யுத்தங்களாக, இந்திய தேசத்தை பாதுகாக்கும் யுத்தங்களாக இந்திய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த யுத்தங்களில் இந்தியக் கலைஞர்கள் யுத்த முனைக்குச் சென்று இந்திய இராணுவத்தினருக்கு மனோபலத்தை அளிக்கக்கூடிய கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி இருந்தனர். ஆனால் விடுதலைப்புலிகள் - இந்திய யுத்தத்தினை ஓர் அர்த்த மற்ற யுத்தமாகவே பெரும்பான்மை இந்திய மக்கள் கருதுவதுடன் இந்திய அரசின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் ஏராளமான இந்திய இராணுவத்தினர் அநியாயமாக பலியாகிக்கொண்டு இருக்கின்றனர் என்று இந்திய அரசின் மீது குற்றம் சுமத்தியும் வருகின்றனர். இந்திய இராணுவத்தினர் மத்தியிலும் இந்த உணர்வு காணப்படுகின்றது. இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த ஒரு ஈழத்து பத்திரிகையாளருடன்



உரையாடும்போது இந்திய இராணுவ அதிகாரி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் "இன்னொரு நாட்டிற்காக தேவையற்ற விதத்தில் உயிரிழந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலைக்கு ராஜிவ்காந்தி அரசே பொறுப்பேற்கவேண்டும். அடுத்த தேர்தலில் இராணுவத்தினரின் வாக்குகள் நிச்சயமாக ராஜிவ் காந்தியின் கட்சிக்கு கிடைக்கப்போவதில்லை".

இந்திய அரசினைக் கண்டித்தும் இந்திய இராணுவத்தினரின் கொடூரங்களை வெளிப்படுத்தியும், இந்திய கலைஞர்கள் விடுதலைப்புலிகளுக்காக கலைப்படைப்புகளை உருவாக்கும் நிலையும் இன்று உருவாகியுள்ளது. பல இந்தியக் கட்சிகளும் இலங்கைப் பிரச்சனையில் இந்திய அரசின் அணுகுமுறைகளை கண்டித்து வருவதுடன் இந்திய படைகள் இலங்கையினை விட்டு வெளியேற வேண்டுமென்பதனையும் முன் வைத்துள்ளன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மாக்சிற் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட இந்திய படைகள் வெளியேற வேண்டுமென்ற கருத்தை கூறியுள்ளன.

இந்தியப்படைகள் இலங்கையைவிட்டு வெளியேற வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு இந்தியாவிலேயே பெரும் ஆதரவு கிடைத்து வருகின்றது. இந்நிலையில் இந்திய அரசுடன் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள முரண்பாட்டை இந்திய தேசத்துடனான முரண்பாடாகவோ, இந்திய மக்கள் சக்தியுடனான முரண்பாடாகவோ கருதிக்கொள்வது அர்த்தமற்றது.

## 4. இந்தியப்படைகள் வெளியேறிய பின் ஸ்ரீலங்காப்படைகள் இனப்படு கொலைகளைச் செய்தால் என்ன செய்வது?

இந்தியப்படைகள் வெளியேறுமானால் ஸ்ரீலங்காப் படைகள் தமிழர்களை அழித்தொழித்துவிடும் என்று இந்திய அரச மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. தனது குகைக்குள் மிருகங்களை அடைத்து வைத்திருந்து, தனது தேவைக்கேற்ப அவற்றை கொன்று தின்னும் சிங்கம் ஒன்று, குகைக்கு வெளியே நீங்கள் சென்றாலோ அல்லது எனது காவலை விலக்கிக் கொண்டாலோ வேட்டைக்காரர்கள் உங்களைக் கொன்று விடுவார்கள் என மிருகங்களைப் பார்த்து சொன்னால் அது எவ்வளவு அபத்தமாக இருக்குமோ அதனை விட இந்தியாவின் இந்த போலிக் கவலை அபத்தமானதாக அமைகின்றது.

நாம் இப்படிக் குறிப்பிடுவது ஸ்ரீலங்காப்படைகளின் இனப்படுகொலைகள் புரியம் தன்மைகளை நிராகரிப்பதற்கல்ல. ஆனால் கடந்த காலங்களில் ஸ்ரீலங்காப்படைகள் செய்த இன அழிப்பினையே மிஞ்சக்கூடிய வகையில் இனப்படுகொலை செய்து வருவதுடன் தமிழ்க் கைக்கூலிகளை வளர்த்து அதன் மூலமும் இன அழிப்பில் ஈடுபட்டுவரும் இந்தியாவுக்கு ஸ்ரீலங்காப் படைகளின் இனப்படு கொலைகளைப் பற்றிக் கதைக்க எவ்வித அருகதையுமில்லை என்பதனைச் சுட்டிக்காட்டவே இதனைக் குறிப்பிடுகிறோம். இந்தியா வெளியேறிய பின் ஸ்ரீலங்காப் படைகள் இன அழிப்பில் ஈடுபடலாம் எனற அச்சத்திற்கும் எமது கடந்த கால அனுபவங்களே காரணமாக அமைகின்றன. இன்றைய நிலையில் இந்தியப்படைகளின் இன அழிப்பினையும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் செயற்பாட்டையும் தடுத்து நிறுத்த இந்தியப்படைகளை அரங்கில் இருந்து அகற்றுவததைத் தவிர வேறுவழியில்லை.

இந்தியா வெளியேறிய பின்னர், தமிழீழப் பிரதேசங்களில் ஸ்ரீலங்காப் படைகள் இன அழிப்பில் ஈடுபட முனையுமானால் அதனை எக்காரணம் கொண்டும் விடுதலைப்புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. ஒரு லட்சம் இந்தியப்படைகளையே எதிர்த்து யுத்தம் நடத்தி, போர் முனையில் உரம் பெற்று இருக்கும் விடுதலைப்புலிகளால் ஸ்ரீலங்கா படைகளை நிச்சயமாக எதிர் கொள்ள முடியும். மீண்டும் இன அழிப்பில் ஸ்ரீலங்காப் படைகள் ஈடுபடுமானால் அது தமிழீழப் பாதையில் நாம் வீறுகொண்டு முன்னேற வழிசமைக்கும்.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ்பேசும் மக்களுக்கெதிரான இனப்படுகொலைகளைச் செய்தபோது இருந்த நிலைமைகளை விட இன்றைய நிலைமைகளில் மாற்றங்கள் உள்ளன. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு முறை சாத்தியமற்றது என்பதனை அனைவரும் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இராணுவ அணுகு முறை இன்று தோல்விகளைச் சந்தித்துள்ளது. இராணுவ அடக்குமுறைகளை

ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளுமானுல் சர்வதேச ரீதியில் அந்நியப்பட்டுப் போகவேண்டிய நிலைமைகளும் உருவாகும்.

மேலும், இன்று தென்னிலங்கையில் ஆயுதப்போராட்டம் தீவிரமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்த ஆயுதப் போராட்டத்தை எதிர் கொள்ள பெரும் எண்ணிக்கையான ஸ்ரீலங்காத்துருப்பினர் தென்னிலங்கையில் குவிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில், இராணுவத் தீர்வு முறையின் அடிப்படையில் இன அழிப்பில் ஈடுபட முயன்ருலும், அதனை முன்னைப்போல தீவிரமாகச் செய்வதற்குரிய போதியளவு இராணுவ பலம் ஸ்ரீலங்கா அரசிடம் இல்லை. ஏறத்தாள மொத்தம் 60,000 துருப்புக்களைக் கொண்ட ஸ்ரீலங்கா அரசால் நாட்டின் முழுப்பகுதியிலும் (தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னனி; வடக்கு-கிழக்குப் பகுதியில் விடுதலைப்புலிகள்) நடைபெறும் போராட்டத்தை எதிர்கொள்வது கடினமானதே. அவ்வாறு இராணுவத்தை ஈடுபடவைத்தாலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளில் முன்னைற் போன்று தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. எது எவ்வாறு இருந்த போதிலும் ஸ்ரீலங்காப்படைகள் இன அழிப்பினை மேற்கொள்ள முனையுமானுல், அதனை எதிர்த்து தற்காப்பு யுத்தத்தினை நடத்தக் கூடிய ஒரு போராட்டச் சக்தியாகவே விடுதலைப்புலிகள் உள்ளனர்.

முதலையின் வாயினுள் அகப்பட்டிருக்கும் ஒருவன் தான் முதலையின் பிடியில் இருந்து விடுபட்டு வெளியேறினுல், ஆற்றங்கரையின் காடுகளிலுள்ள மிருகங்கள் சில வேளைகளில் தாக்கலாம் என்பதற்காக முதலையின் பிடியில் இருந்து விடுபடுவது குறித்து தயங்குவது எவ்வளவுதூரம் அர்த்த மற்றதோ அதைப்போலத் தான் இந்திய ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபடுவதற்கு, ஸ்ரீலங்கா படைகளின் ஒடுக்கு முறை குறித்து அஞ்சுவதும் அமைகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து இந்தியப்படைகள் வெளியேறினுல் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான தடைக்கல் அகற்றப்படும். இந்தியப்படைகள் வெளியேறிய பின் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ருமல் மீண்டும் இன அழிப்பு நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளுமானுல், தமிழீழம் தவிர்த்த வேறு எந்தத் தீர்வுமுறை மூலமும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டின் நியாயத்தன்மை சர்வதேச அரங்கில் உணர்த்தப்படும்.

தமிழீழ இலட்சியத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளைக் களப்பலி கொடுத்த விடுதலைப்புலிகள், பெரும் ஆட்சி அதிகாரங்களுக்காக மக்களையும், உரிமைகளையும் விலைபேச மாட்டார்கள். இதனை அவர்களின் கடந்த கால வரலாறு காட்டி நிற்கின்றது. பதவிகளை அடைவதனையோ அல்லது சலுகைகளைப் பெறுவதனையோ நோக்கமாக விடுதலைப்புலிகள் கொண்டிருந்தால் இந்திய அரசினையும் ஆளும் வர்க்கத்தினையும் எஜமானர்களாக ஏற்று இலகுவாக ஆட்சி பீடம் ஏறியிருக்க முடியும். எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியப்படைகளை எதிர்த்து யுத்தம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. மக்களின் உரிமை விடயத்தில் எந்தவித விட்டுக் கொடுப்புகளுக்கும் இடம் இல்லை என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருக்கின்ருர்கள்.

எனவே, இன்றைய விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை குறித்து சந்தேகமும் குழப்பமும் அடையாது, எமது போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி வரலாற்றை முன்னேற்றுவதற்கு தேவையான பொருத்தமான ஒரு இராஜதந்திர நகர்வாக இப்பேச்சுவார்த்தையினை நோக்குவோம்.



# புலிகளை வாழ்த்துவோம்

புத்தெழில் கொஞ்சும் தமிழீழத்தில்
தித்திப் பளிக்கும் முஸ்லீம் சிறுவரின்
முத்தம் வாங்கி முழங்கு போர்க் களத்தே
இத்தமிழ் விடுதலைப் புலி எழு கின்றான்...

எங்கள் சிறிய பிள்ளைகள் எழுச்சி
பொங்கிப் படைக்கும் புலிகள் தோளில்
தொங்கி ஆடத் துடிக்கும் காலம்...

மதங்கள் வேறுதான் மனங்கள் நூறு
விதங்களா? இல்லை! தமிழ்மனம் ஒன்றே!

கற்றவர் மலிந்த கலையாழ் மண்ணும்
அற்புத மீனிசை அமைந்த தேனாடும்
நெற்கதிர் குலுங்கும் வன்னி நிலமும்
நற்றமிழ் முதுபுகழ் மாந்தை நன் னாடும்
உற்ற கோணமா மலையும் மக்கள்
பற்றிவாழ் காத்தான் குடிப்பட் டணமும்
கற்குடாக் கடலும் நாட்டுக் கவிதை
முற்றிப் பழுத்த அக்கரைப் பற்றும்
விற்பனை மடுவின் விரிந்த காடும்
பற்றிப் பறிக்க எண்ணிய பகைவர்
நெற்றி பிளந்த நெருப்பின் புலிகளை
நற்றமிழ் ஈழ நாடு மறக்குமோ?

கழுத்தில் நஞ்சு கட்டிய தமிழர்
நிலத்தின் புலிகளை நெஞ்சால் வாழ்த்துவோம்!



கவிஞர் காசி ஆனந்தன்

# தமிழீழம்
# சில வரலாற்று நகர்வுகள்

## பூரணகட்டுப்பாட்டை நோக்கி தமிழீழம்.



போக்குவரத்துச் சபை
TRANSPORT BOARD
தமிழீழம்
TAMIL EELAM



***10.04.85***

*யாழ். பொலீஸ் நிலையத் தாக்குதல்*

*விடுதலைப் போராட்ட வளர்ச்சி வரலாற்றின் ஒரு புதிய மைல்கல் அதிபாதுகாப்புக் கொண்டதும், கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்ததுமான இப்பொலீஸ் நிலையம், விடுதலைப் புலிகளின் அதிரடிப் பிரிவினரால் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டதுடன் பெருமளவு ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.*

*தாக்குதலிற்குப்பின் சிங்களத் துருப்பினர் நகரிற்குள் புகுந்து அப்பாவி மக்களைத் தாக்காதவாறு விடுதலைப்புலிகள் மக்களிற்குப் பூரண பாதுகாப்பும் கொடுத்தனர்.*

*இதனைத் தொடர்ந்து தமிழ்ப்பிரதேசங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், தமிழீழத்தின் பெரும்பகுதியை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. இக்காலத்தில் ராணுவத்தினரை முகாம்களிற்குள் முடக்கி வைத்ததோடு, சிவில் நிர்வாகத்தையும் விடுதலைப்புலிகள் சிறப்பாக மேற்கொண்டனர்.*

■ ■ ■

*86ம் ஆண்டு ஜூன், அக்டோபர் மாதங்களில் இடம் பெற்ற முப்படைத் தாக்குதல் முறியடிப்பும், அடம்பனில் மறைந்த தளபதி விக்டரின் தலைமையில் இடம் பெற்ற ராணுவம் மீதான தாக்குதல்களும், விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றுக் குறிப்பில் முக்கிய இடத்தை வகிப்பன.*

*விமானப்படையின் உதவியுடன் யாழ் குடாநாட்டின் அனைத்து முகாம்களிலிருந்தும் ஒரே நேரத்தில் வெளியேறிய முப்படைகளையும் எதிர்த்து விடுதலைப்புலிகள் தொடுத்த வீரயுத்தம் சர்வதேச ராணுவ நிபுணர்களால் வியப்புடன் பாராட்டப்பட்ட ஒன்று.*

*விடுதலைப்புலிகளின் ராணுவ பலத்திற்கு முன்னே திணறிய ஸ்ரீலங்காப் படையினர் பாரிய இழப்புக்களுடன் மீண்டும் முகாம்களிற்குள் முடக்கப்பட்டனர்.*

*அடம்பனில் இடம்பெற்ற மோதலில் 9 சிங்கள ராணுவத்தின் உயிரற்ற உடல்களைக் கைப்பற்றிய விடுதலைப்புளிகள் 2 சிப்பாய்களை உயிருடன் கைது செய்து சாதனை படைத்தனர்.*

■ ■ ■

***19-12-86***

*கைதிகள் பரிமாற்றம் இருவேறு நாடுகளிற்கிடையேயான யுத்தக்கைதிகள் பரிமாற்றத்தைப்போன்று, விடுதலைப் புலிகளுடன் கைதிகளைப் பரிமாறிக் கொண்டதன் மூலம் இலங்கைத் தீவில் தமிழீழம், ஸ்ரீலங்கா என இருவேறுநாடுகள் உண்டென்பதை சிங்கள அரசு மறைமுகமாக ஒப்புக்கொண்டது.*

■ ■ ■



வடமராட்சி முற்றுகை

**இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தம்**



**சுதுமலைப்பிரகடனம்**



***01-05-87***

- விடுதலைப் புலிகளின் பதாகையின் கீழ் மேதின எழுச்சி ஊர்வலம்
- ஸ்ரீலங்கா அரசின் தடைகளை மீறி தமிழீழம் எழுச்சி கொண்டது.
- நல்லூரில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்திற்கு இலட்சக்கணக்காண மக்கள் அணி திரண்டனர்.

■ ■ ■

***26-05-87***

பாரிய குண்டுவீச்சு, மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகளோடு வடமராட்சியை முற்றுகையிட்டது சிங்கள அரசு.

- வடமராட்சியைக் கைப்பற்றிவிட்டோம் என இறுமாந்திருந்த சிங்கள அரசை நெல்லியடியில் வைத்து நேருக்குநேர் சந்தித்தான் கரும்புலி கப்டன் மில்லர்.
- நூற்றுக்கு மேற்பட்ட சிங்கள ராணுவத்தினரைப் பலிகொண்ட இத்தாக்குதலே இறுதிப்புலி இருக்கும்வரைக்கும் தமிழீழம் தலைவணங்காது என்பதையும், ராணுவரீதியாக விடுதலைப்புலிகளை வீழ்த்திவிட முடியாது என்பயையும் சிங்கள அரசிற்கு உணர்த்தியது.

■ ■ ■

***29-07-87***

- தமிழினத்தின் விடுதலைப்போரைக் கருவறுத்த கறுப்பு ஒப்பந்தம் கொழும்பு நகரில் கைச்சாத்திடப்பட்டது.
- தமிழீழ மக்களைப் படுகொலைபுரிந்த ஜெயவர்த்தனவும், தமிழீழ தேசிய எழுச்சியை நசுக்கிவிடத் துடித்த ராஜீவும், தமிழினத்தை முற்றாக அழிக்க உறுதிபூண்டு கொழும்புநகரில் கைகுலுக்கிக் கொண்டனர்.
- 'அமைதிப்படை' என்ற பெயரில் ஆயிரமாயிரம் இந்திய ஆக்கிரமிப்புத் துருப்புகள் டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் தமிழீழத்திற்குப் படையெடுத்தனர்.

■ ■ ■

***04-08-87***

"....................இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. தமிழீழத் தனியரசே தமிழ்மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்தும் போராடுவேன் என்பதை இங்கு திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்..........."

■ ■ ■

---

"போராட்ட வடிவங்கள் மாறலாம் - ஆனல் போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை"

---

## தீலீபன்
## - ஒரு திருப்பத்தின் தொடக்கம்



*15-09-87 — 26-09-87*

ஒப்பந்தத்தில் கூறப்பட்டவற்றிக்கு மாருக செயற்பட்ட இந்திய அரசிடம் ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து ஒரு புனிதப்போரில் குதித்தான் விடுதலைப்புலிகளின் யாழ்பிராந்திய அரசியற்பிரிவுப் பொறுப்பாளன் திலீபன்.
இவன் பன்னிருநாட்களாய் பட்டினியால் துவண்டபோதும்,
வஞ்சக மௌனம் சாதித்தது இந்திய அரசு
ஈற்றில் தமிழினம் முழுவதும் கலங்கி நிற்க திலீபன் தியாக மரணத்தைத் தழுவுக் கொண்டான்.

இந்திய அரசே! உனது ஆதிக்க அகம்பாவம் இங்கோர் தியாகத்தைச் செயலிழக்கச் செய்துவிட்டது.
திலீபன் அமைதியானுனே ஒழிய அழிந்துவிடவில்லை.
அவன் சுருண்டுகிடப்பதைப் பார்த்தே பலர் எழுந்து கொண்டனர்.

---

**காந்தி தேசத்துடன் அகிம்சை பேசமுடியாது**
**என்பதனை திலீபனின் மரணமே உணர்த்தியது**

---

■ ■ ■

## பாரதத்தின் நம்பிக்கைத் துரோகம்
## பன்னிரு வேங்கைகள் வீரமரணம்!

*05-10-87*

கப்பல் உலாவரும் கடலே! பேசு
உப்புக் காற்றே! ஊதத் தொடங்கு.
எங்கே எங்கள் தலைவர்கள்? என்று
இந்திய அரசை எதிர்த்துநீ கேளு!

கப்பல் உலாவரும் கடலே! பேசு.
உப்புக் காற்றே! ஊதத் தொடங்கு.

குமரப்பா! புலேந்திரன்! எங்கே? எங்கே?
அப்துல்லா! ரகு! நளன்! கரன்! எங்கே?
அன்பழகன்! மிரேஸ்! தவக்குமார் எங்கே?
ஆனந்தக்குமார்! ரெஜினேல்ட்! பழனி!
எங்கே? எங்கே? என்று நீ கேளு


எங்கே எங்கள் தலைவர்கள் என்று
இந்திய அரசை எதிர்த்து நீ கேளு

வல்வெட்டித்துறைக் கடலிலே போனர்
வரிப்புலித் தலைவர்கள் கைதிகள் ஆனர்
இலங்கையின் அரசு விலங்கினை இட்டது
இந்திய அரசது... உளம் மகிழ்ந் திட்டது.

கப்பல் உலாவரும் கடலே! பேசு
உப்புக் காற்றே ஊதத் தொடங்கு.

களம் பல கண்ட காளைகள் இவர்கள்
பலப் பல சாதனை படைத்தவர் இவர்கள்
எதிரியின் பாசறை இடித்தவர் இவர்கள்
ஏற்றிய புலிப் படை இளையவர் இவர்கள்

எங்கே எங்கள் தலைவர்கள் என்று
இந்திய அரசை எதிர்த்து நீ கேளு



வேங்கைகள் கோழைகள் ஆவதும் இல்லை.
விலங்குடன் வேங்கைகள் நடந்ததும் இல்லை
கொள்கையின் படியவர் நஞ்சதை உண்டார்
கோபுரத் தீபங்கள் தீயினில் போனார்


கப்பல் உலாவரும் கடலே! பேசு.
உப்புக் காற்றே! ஊதத் தொடங்கு.

தீருவில் வெளியினில் மூண்டது நெருப்பு
தேம்பிய கடலுடன் திசைகளும் அழுதது.
இறக்கிய ஆயுதம் எழுந்தது அங்கு.
இவர்களின் சாவுடன் மூண்டது யுத்தம்.

எங்கே எங்கள் தலைவர்கள் என்று
இந்திய அரசை எதிர்த்து நீ கேளு.

■ ■ ■

## தொடரும் துரோக வரலாறுகள்




***09-10-87***

உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாடு எனத் தன்னைத் தம்பட்டமடித்துக் கொள்ளும் இந்தியா, ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகை நிறுவனங்களைக் குண்டுவைத்துத் தகர்த்து, பத்திரிகையாளர்களையும் கைதுசெய்ததுடன் 'நிதர்சனம்' தொலைக்காட்சி நிலையத்தையும் அழித்தது.

■ ■ ■

***10-10-87*** இந்திய "அமைதிப்படையினரின்" தொடர்ந்த இன அழிப்பில் சர்வதேச போர்விதிமுறைகள் மீறப்பட்டன. நிராயுதபாணிகளிற்கெதிராக ஒரு நீண்ட யுத்தம் பிரகடனமானது. இந்திய அரசின் இக்கொடிய யுத்தத்திற்கு வைத்தியசாலைகள், நோயாளர்கள், வைத்தியர்கள் கூட விதிவிலக்காகவில்லை.

---

தலைவிரி கோலமாய் ஒருத்தி தமிழீழமெங்கும் தெருத்தெருவாகத் திரிகின்றாள்.

தம் இனிய மைந்தரை இழந்த ஆயிரமாயிரம் தமிழீழத் தாய்மாரின் அலறல் அவள் நெஞ்சில்
தம் இனிய கணவரைப் பறிகொடுத்த ஆயிரமாயிரம் தமிழீழப் பெண்களின் அவலம் அவள் நெஞ்சில்

அவள் தெருத்தெருவாகத் திரிகின்றாள்.

கற்பழிக்கப்பட்ட கன்னியர் ஷெல் அடிபட்டுச் சிதறிய சிசுக்கள்
முடமாக்கப்பட்ட அப்பாவிகள் எரியூட்டப்பட்ட இல்லங்கள்

அத்தனை பேரின் வேதனையும் கண்களில் வழிய அந்த ஒருத்தி திரிகின்றாள்.

---



■ ■ ■

## திலீபனின் வழியில் அன்னை பூபதி!




**17.04.'88**

மதுரையில் நீதி கேட்டு
கண்ணகி காற்சிலம்புடன் நடந்தாள்
மட்டக் களப்பில் நீதி கேட்டு
"பூபதி" பசித்த வயிறுடன் கிடந்தாள்
காந்தி பிறந்த தேசத்துக்கு
திலீபன் கன்னத்தில் அறைந்தான்
... அன்னை பூபதி...
அடிக்கவில்லை; காறி உமிழ்ந்தாள்

"இந்திய அரசே" வேங்கைகளுடன் மோதாதே"
நிறுத்து! என்று போராடினாய்.
உண்ணாநோன்பிருந்து உருகினாய்.
அவர்கள் உன் மூச்சையே நிறுத்திவிட்டார்கள்.
பாரத அரசு! உன் சாவுக்குப் பின்பு
பாதக அரசு என்பது புலனாயிற்று.
அம்மா!... உன் இறப்பு.
இந்திய அரசை அம்மணமாக்கியது.
வெட்கம் கெட்டவர்கள்
வெளியில் உலாவுகின்றனர்

தாயே! நீ..
உண்ணாநோன்பிருந்து மரணித்த
முதற் பெண்மணி!
தமிழீழ மக்களின் கண்மணி
தியாகப் புயலே! எங்கங் தேசத்தின் கனலே!
உன்மூச்சுக் கலந்த காற்று
எங்கள் மூக்கில் பட்டாலே...
வீரம் பிறக்கும்
தாயே! வணங்குகின்றோம் வாழ்த்துச் சொல்லு.
படைகள் புறப்படுகின்றது.
வழியனுப்ப வா.

■ ■ ■

## விடுதலைப்புலிகளின் நல்லெண்ண முயற்சிகளின் தோல்வி



**18.11.'87**

விடுதலைப்புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய ராணுவத்தினர் துன்புறுத்தப்பட்டதாகவும், கொல்லப்பட்டதாகவும், இந்திய அரசால் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பொய்ப்பிரச்சாரத்திற்கு மாறாக, இந்திய மக்கள் மீது விடுதலைப்புலிகள் கொண்டுள்ள நல்லெண்ணத்தின் அடிப்படையில் இக்கைதிகள் எவ்வித நிபந்தனையுமின்றி பத்திரிகையாளர் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

சமாதான முயற்சிகளிற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல என்றும், நிபந்தனையற்ற போர் நிறுத்தம் குறித்தும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை விளக்கி தலைவர் பிரபாகரனால் இந்தியப் பிரதமரிற்கு பல கடிதங்கள் எழுதப்பட்டபோதும் அவை திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டன.

■ ■ ■



**13-03-88**

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்தவென, இந்திய அரசால் சென்னையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் தளபதி லெப். கேர்ணல் ஜொனி. சிறிதும் நாகரீகமற்ற முறையில் வஞ்சகமாகக் கொல்லப்பட்டமை இந்திய அரசின் இரட்டை வேடத்திற்கு இன்னு மொரு சாட்சியாகும்.

**08. 8. 88**

இந்தியாவில் இருந்து சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்திய விடுதலைப்புலிகளின் தளபதிகள் “தேசியபாதுகாப்புச் சட்டம்” என்ற பெயரில் கைதுசெய்யப்பட்டதுடன், பலர் தொடர்ந்தும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

■ ■ ■

## தேர்தல் நாடகம்

எங்கள் தலைவிதியை
இங்கு
யாரோ நிர்ணயித்தனர்
செத்தவர்கள் கூட
இங்கு
வாக்களிக்க வந்தனர்
இந்திய ‘ஜனநாயகம்’
எப்படி யென
இன்று நாம் புரிந்து கொண்டோம்

■ ■ ■

## ராணுவ வெற்றிகளில் விடுதலைப்புலிகள்

நூற்றுக்கணக்கான ராணுவமுகாம்களையும், ஆயிரக்கணக்கான துருப்புகளையும், கூடவே துணைக்குத் தமிழ்த்துரோகக் குழுக்களையும் வைத்துக்கொண்டுள்ள இந்தியப்படையானது, விடுதலைப்புலிகளின் பரந்துபட்ட கொரில்லாத் தாக்குதல்களிற்கு ஈடுகொடுக்கமுடியாது திணறிவருகின்றது.
அண்மைக்காலங்களில் விடுதலைப்புலிகள் அடைந்துவரும் ராணுவவெற்றிகள் சர்வதேசஅரங்கில் கவனத்திற்குரியதாகி வருகின்றன.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரும், இந்திய ராஜ்யசபை உறுப்பினருமான திரு வை. கோபால்சாமி, இந்தியப்படைகளின் பாதுகாப்பு வளையத்தை உடைத்துக்கொண்டு விடுதலைப்புலிகளால் தமிழீழத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.
சுமார் 24 நாட்கள் தமிழீழத்தின் அடர்ந்தகாடுகளில் விடுதலைப்புலிகளின் தலைவர், மற்றும் தளபதிகளை சந்தித்து உரையாடிய இவர், மீண்டும் தமிழகத்திற்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டார்.
அண்மைக் காலங்களில் விடுதலைப்புலிகள் ராணுவரீதியில் அடைந்துவரும் மேம்பட்ட நிலைக்கு இந்நிகழ்ச்சி சிறந்ததொரு உதாரணமாகும்.



■ ■ ■

## விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதேசாவின் நிபந்தனையற்ற பகிரங்க அழைப்பை ஏற்று விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவினர் கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் இந்தியப்படைகள் ஜுலை 29 க்கு முன்னர் இலங்கைவிட்டு வெளியேற வேண்டுமென்ற முக்கியவிடயத்தில் உடன்பாடு கண்டுள்ளனர்.

இவ்உடன்பாட்டின்படி, இந்தியப்படைகள் ஜுலை 29 க்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவு பிறப்பித்துள்ளார்.



வீட்டிற்கு போ படைவீரனே! நீ இங்கிருப்பது காற்றை நாசப்படுத்துகின்றது, உனது புன்முறுவல் எங்களை அலங்கோலப்படுத்துகின்றது.
வீட்டிற்கு போ படைவீரனே! உன்னை பிணமாக நாங்கள் உன் வீட்டிற்கு அனுப்புவதற்கு முன்.

# நாங்கள் பனைமரங்கள்

நாங்கள்
பனைமரங்கள்

யுகங்களின்
பரிதவிப்பில்
பிரசவித்துக்கொண்ட
வறண்ட பூமியின்
வாரிசுகள்

பிரபஞ்சத்தில்
புதியபெயரொன்றைப்
பிரேரிப்பதற்காய்
வறுமை வயல்களில்
விழுந்து முளைத்த
விருட்சங்கள்

துயர்தோய்ந்த
இரவுகளின்
இருண்மையை விரட்ட
விழுதுகளையும் கிளைகளையும்
விட்டுப்பிரிந்த
நெருப்பின்
குழந்தைகள்

நாங்கள்
கனவுகளின் மிதப்பில்
தடுமாறி
காற்றின் திசையில்
தலைசாயும்
நாணல்களல்ல

நிமிர்ந்து நிற்கின்ற
நெட்டைப்பனைமரங்கள்

கொட்டும்மழை
குமுறும் கடலலை
சுட்டெரிக்கும்
சூரியப்பார்வை
திக்குகள் திடுக்கிடும்
மின்னல் இடி முழக்கம்
மேகக் கதிர்வீச்சு
என்ன செய்யும்
எங்களை

எங்கள் வீழ்ச்சி
மரணமல்ல
விளைந்தபயிரின்
அறுவடை

நாங்கள்
பனைமரங்கள்
நிமிர்ந்து நிற்கின்ற
நெட்டைப் பனைமரங்கள்



# ஈழப்பிரச்சனையும் தீர்வுகளும்!

— கி. வீரமணி எம். ஏ., பி.எல்.,
பொது செயலாளர் திராவிடர்கழகம்



ஈழத்தில் தமிழர்கள் படுகொலைக்குப் பெரிதும் ஆளானபோது அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்ற நோக்கத்தில் 'இந்திய அரசே'

இந்திய இராணுவத்தை ஈழத்துக்கு அனுப்பு 'தமிழர்களைக் காப்பாற்று' என்று குரல் கொடுத்தோம்.

ஆனால் அந்த நேரத்தில் இந்திய அரசு ஈழத்துக்கு இந்திய இராணுவத்தை அனுப்பவில்லை.

அதற்கு மாறாக, இனியும் விடுதலைப் புலிகளைச் சமாளிக்க முடியாது; பிரபாகரனிடம் சரணாகதி அடைந்துவிட வேண்டியதுதான் என்கிற நிலைமை இலங்கை அதிபர் ஜெயவர்தனேக்கு நெருக்கடி ஏற்பட்டபோது, இந்திய இராணுவம் ஈழத்துக்குச் சென்று, ஜெயவர்த்தனே அரசைக் காப்பாற்றி விடுதலைப்புலிகளால் ஈடேற்றப்பட இருந்த தனியீழம் மலர்வதைத் தடுத்தது என்பதுதான் உண்மையாகும்.

இந்தியாவும், இலங்கையும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தம் தமிழீழ மக்களைக் கலந்தோ, அல்லது தமிழீழத்தில் தன்னிகரற்ற போராளி அமைப்பாக இருக்கக்கூடிய விடுதலைப்புலிகள் அமைப்பைக் கலந்தோ செய்து கொள்ளப்பட்டதல்ல.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் சம்பந்தப்பட்டவர்களைச் சம்பந்தப்படுத்தாத கோமாளித்தனமான அதே நேரத்தில் ஒரு விடுதலைப்புரட்சியை நசுக்கும் நச்சு எண்ணம் கொண்ட ஒப்பந்தமாகும்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கண்டுள்ள சரத்துகளை நிறைவேற்ற வேண்டுமென்று கூறித்தான் விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த வீரமறவன் திலீபன் தண்ணீர்க்கூட அருந்தாமல் உண்ணாநோன்பு இருந்து புதிய தியாக வரலாறு படைத்தான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தப்பகுதி இந்திய அமைதிப் படை (?) ஈழத்தில் இருக்கும் தருணத்தில்தான் புலேந்திரன் உட்பட 13 இளம் புலிகள் மாளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. துப்பாக்கி ஏந்திக்கொண்டிருந்த இந்திய ராணுவம் பூப்பறித்த கதையாக மாறி, இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்பது காகித ஒப்பந்தம் மட்டுமே என்கிற நிலைக்கு ஆளானது.

இந்திய இராணுவம் போராளிகளிடமிருந்து ஆயுதங்கள் பறிப்பு என்ற போர்வையில் ஆடிய ஆட்டம் அருவருக்கது. சிங்கள இராணுவம் தமிழர்களை எந்தெந்த வகைகளில் எல்லாம் கொடுமைப்படுத்தியதோ, அவற்றிற்குக் குறையாமல் இந்திய இராணுவம் அங்கே 'நிர்வாண ஆட்டம்' போட்டது. உலக மனிதாபிமான (AMNESTY INTERNATIONAL) அமைப்பு இந்திய இராணுவத்தின் மனிதாபிமான மற்ற நடவடிக்கைகளை உலக மக்கள் மன்றத்திலே தோலுரித்துக் காட்டியது.

இந்த நிலையில்தான் விடுதலைப்புலிகளும், இலங்கை அரசும் பேச்சு வார்த்தையில் ஈடுபடவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதனால் இந்தியாவின் ராஜதந்திரத்துக்கு மரண அடி விழுந்து, உலக நாடுகள் மத்தியில் தலை குனிவும் பரிதாப நிலேயும் ஏற்பட்டது.

விடுதலைப்புலிகளும், இந்திய அரசும் நடத்தும் பேச்சு வார்த்தையின் மூலம் ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது என்பதிலே இந்திய அரசு குறியாக உள்ளது.

விடுதலைப்புலிகள் தனியீழத்தை விட்டு விட்டார்களே என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறது. இலங்கையின் ஒருமைப் பாட்டை காப்பாற்றுவதற்காகத்தான் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் என்று சொன்னவர்கள் இவ்வாறு கூறுவது விசித்திரம் அல்லவா?'

'விடுதலைப்புலிகள் தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்கள்' என்று இந்திய தொலைக்காட்சியும், வானொலியும் மற்றும் பல ஏடுகளும் பிரச்சாரம் செய்கின்றன.

அது உண்மையா? சரியா என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

வாதத்திற்காகக் கூறுவது உண்மை என்றால், ஒப்பந்தத்தின் அடிப்படை நிறைவேற்றப்பட்டு விட்டது என்று மகிழ்ந்து விடுதலைப் புலிகளுடன் கைகுலுக்க அல்லவா ராஜீவ் அரசு முன் வரவேண்டும்.

மாறாக, சில அனாம தேயங்களேயும், ராஜீவின் வட நாட்டு ஏஜெண்டான சோழவந்தான் பார்ப்பனர் சுப்பிரமணிய சாமிகளையும் விட்டு, ஒரு 10, 20, பேர்கள் தமிழ் ஈழம் தேவை என்று அட்டைபிடித்து "பேரணி" போவதை நமது தொலைக்காட்சியும் பல நிமிடங்கள் காட்டுகின்றதே.

விபீடணப் பெருமாள்களின் போலி ஈழப் பிரகுடனங்களை வெளிச்சம் போட்டு விளம்பரம் செய்கின்றனவே.

ஈழத் தமிழர்கள் விரும்புவது தமிழ் ஈழம்...... இந்திய ஈழம் அல்ல. அல்லவே அல்ல.

அதை பெறத் தகுதியுடையவர்கள் யார் என்பதை ஈழத் தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

பொம்மை அரசுகளால், எடுபிடி ஏவலாளர்களால் அதை வென்றெடுக்க முடியாது என்பது அவர்களுக்கு நன்முகப் புரியும்.

ஈழத்தில் நிரந்தரமாகத் தங்கி இந்திய இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துவிட முடியுமா? இன்று இல்லாவிட்டாலும், நாளை திரும்பி விடும் படை தானே இது.

அந்த நிலையில் ஈழத் தமிழர்களின் உயிரையும் உடைமைகளையும், மானத்தையும் சிங்கள பேரினவாதத்திடமிருந்து காக்கும் உண்மையான படை விடுதலைப்புலிகள் தானே?

அத்தகைய உண்மைச் கவசத்தை நிர்மூலப்படுத்திட இந்திய இராணுவம் துடியாய் துடிப்பது ஏன்? இதனுடைய பின் விளைவு எங்கே கொண்டுபோய்விடும் என்பதைச் சிந்திக்க வேண்டாமா?

இலங்கை அதிபர் எப்பொழுது போகச் சொல்லுகிருரோ அந்தத் தருணமே இந்தியப்படை ஈழத்தைவிட்டு வெளியேறும் என்று ஒரு முறையல்ல, பலமுறை உறுதியளித்தவர்தான் இந்தியப்பபிரதமர். அந்த நாணயத்தைக் காப்பாற்றும் வகையில் இந்தியப்படை வெளியேறினால் தான் எஞ்சி நிற்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையாவது மிஞ்சும்.

விடுதலைப் புலிகளைப்பற்றிய தவறான பிரச்சாரத்திற்கு அதன் பேச்சாளரான திரு பாலசிங்கம் 11-7-89 'இந்து' ஏட்டிற்கு கொழும்புவில் அளித்துள்ள தனிப்பேட்டி ஒன்றில் பல செய்திகளை மிகவும் தெளிவாக விளக்கி, புலிகள் ராணுவத்தில் மட்டுமல்ல; ராஜதந்திரத்திலும் புலிகள் என்பதை உலகுக்கு நிருபித்து விட்டார்.

1. ஈழத் தமிழர்கட்கு பாதுகாப்பும் ஈழத்தில் அமைதியும் ஏற்படவேண்டும் என்ற எங்கள் நோக்கம் நிறைவேற நாங்கள் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்துகொள்வோம்.

எமது மக்கள் ஈழத்தைக் கைவிட்டு விட்டோம் என்ற பிரச்சினை இப்பொழுது எழவே இல்லை,

2. ஆயுதங்கள் முற்முக கீழே போட்டுவிடுவதை நாம் விரும்புகிருேம்; அதற்காக காத்திருக்கிருேம்; ஆனுல் அது இப்பொழுது உடனே முடியாது. காரணம்; மற்ற போராளிக் குழுக்களுக்கு முழு ஆயுத சப்ளை நடத்தப்பட்டுள்ளது. அவைகளுடன் அவர்கள் உள்ளனர்.

3. சிவிஎப் (CVF) என்ற ஒரு ராணுவ அமைப்பை உருவாக்கி அவைகளுக்கு ஏராளமான ஆயுதங்களை வழங்குவதன் மூலம் மேலும் ரத்தக்களரி ஏற்படவே முயற்சிகளைச் செய்கின்றனர்.

4. விடுதலைப்புலிகள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். டெல்லி எங்களை இதில் முழுவதும் தவறாகப் புரிந்துகொண்டு, அந்த வெறுப்புணர்வில் தன்னை ஆழப்புதைத்துக்கொண்டு மீள்
முடியாமல் உள்ளது.

5. விடுதலைப்புலிகள் போராடுவதை நிறுத்தி விடுவார்கள் (CESSATION OF HOSTILITIES) என்று கேட்கும் இந்தியாவுக்கு தெளிவுபடுத்துகிறோம். இந்தியாவைத் திருப்திபடுத்தும் அளவுக்கு நாங்கள் ஒரு ஆக்கரீதியான நிலை எடுத்துள்ளோம்; வெறும் எதிர்மறை நிலை அல்ல.

Mr. Balashigam said when India has asked for clarifications on LTTE's declaration of a cessation of hostilities, the tigers had 'taken a positive stand to satisfy India. India should take this positively rather than negatively.

இந்தியா இதை நல்ல ஆக்க ரீதியாக வரவேற்கவேண்டுமே தவிர சந்தேகக்கண் கொண்டு பார்க்கக்கூடாது.

India should declare a ceasfire with LTTE and invite us for talks. 'We have been pleading with India ever-since the out break of hostilities. We have been pleading with India to stop the offensive and negotiate with us.

இந்தியா புலிப்படையுடன் மோதுவதை நிறுத்தி 'போர் நிறுத்தம்' அறிவிக்க வேண்டும். புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டும்.

இன்று அல்ல, சுசப்புணர்வு விரோதப் போக்கு துவங்கிய சில நாளிலிருந்தே நாங்கள் இதை வலியுறுத்தி வந்துள்ளோம்.

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்

மாகாணசபை,. பாராளுமன்றம் என்ற மாயவலைக்குள் மக்களைச் சிக்கவைக்க, விடுதலையின் எதிரிகளான நம்மினத் துரோகிகளின் துணையோடு அந்நியன் கங்கணம் கட்டி நிற்க, இச் சூழ்ச்சிகளில் சிக்காத இவற்றைப் புரிந்து கொண்ட மக்கள் எழுச்சியோடு, இனவாதத்திற்கு எதிரான நமது போராட்டம் தொடர்ந்து செல்கிறது.

இந்நிலையில் ஆயுதம் ஏந்திய, ஏந்தப்போகின்ற பெண்களைப்பற்றி மக்கள் கூர்ந்து அவதானிக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஆண் மேலாதிக்க ஒடுக்குமுறையும் அதை நியாயப்படுத்தும் கலாச்சாரப் பாரம்பரிய அடக்குமுறைகளும் நம்மை



அமுத்திக்கொண்டிருக்கும் இந்த சமுதாயத்தில் சிங்கள இனவாதத்திற்கெதிரான தேச விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்வதற்குப் பெண்களிற்கு இரட்டிப்புத் துணிச்சல் தேவைப்படுகிறது.

அவ்விதம் அதீத துணிச்சலோடு சமூக அடக்குமுறைகளை உடைத்துக்கொண்டு களம்புகுந்து, போர்க்களம் புகுதல் பெண்களால் முடியாதெனவும் தலைமறைவு வாழ்க்கை (கொரில்லா வாழ்க்கை) பெண்களிற்குப் பொருந்தாதென வும் கருதியிருந்த சமுதாயத்தின் கண்ணோட்டத்திலேயே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது எமது விடுதலைப் புலிகளின் பெண்களணி.

மேலும் தமது சொந்த வாழ்வைத் துறந்து தாயக மண் மீட்பிற்காகவும், தமிழினத்தினத்தின் சுதந்திரத்திற்காகவும் உயிர்த்தியாகம் புரிகின்ற அளவிற்கு மனோதிடமும், இலட்சிய உறுதியும் கொண்டு உழைக்க முடியுமென்பதையும் நிரூபணமாக்கியுள்ளனர் நம்மை விட்டுப் பிரிந்து தாயக மண்ணோடு மண்ணுகைச் சங்கமமாகிவிட்ட நம் தோழிகள்.

மேலும் இவர்களின் சாவும் சாதனைகளும் சமூதாயத்திற் பெண்களை இன விடுதலை சம்பந்தமாகவும், பெண்விடுதலை சம்பந்தமாகவும் சிந்திக்க வைக்கும் ஒளிக்கீற்றாகவும் பெண்களைத் தேச விடுதலை இயக்கத்தினுள் உள்வாங்கும் பாரிய சக்தியாகவும் உருவெடுத்துக் கொண்டிருக்கிறதென்பதையும் கூட எங்கள் பெண்கள் படைப்பிரிவின் வளர்ச்சி துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

பெண்கள் ஆயிரக்கணக்கில் ஆயுதமேந்தும் படைப் பிரிவு, நாளை பல்லாயிரக் கணக்கில் பெண்கள் ஆயுதமேந்தும் படைப்பிரிவாகப் பரிணமிக்கும்!

அப்போது நாம் தமிழினத்தின் சுதந்திரத்துடன் தேசவிடுதலையையும், பெண்கள் விடுதலையையும் ஒருங்கே வென்றெடுத்தவர்களாவோம்!

அதுவரையிற் களத்தில்..................

அவ்வாறே, இது வரையிற் களத்தில் நின்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட எம் வீராங்கனைகள்..........

| திகதி | இயக்கப்பெயர் | சொந்தப்பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த சம்பவம் |
|---|---|---|---|---|
| 10-10-87 | 2ம் லெப்.மாலதி | சகாயசீலி | மன்னார் | கோப்பாயில் நேரடி மோதலின் போது காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு |
| 19-10-87 | விஜி | கோமதி | கோண்டாவில் | கோப்பாயில் செல் தாக்குதலில் |
| 19-10-87 | ஜெனு | புஸ்பலதா | கன்னுட்டி | கோப்பாயில் செல் தாக்குதலில் |
| 03-11-87 | ரூபி | மாரியம்மா | இலுப்பைக்கடவை | கொக்குவிலில் செல் தாக்குதலில் |
| 03-11-87 | சபரி | ஹம்சா | திருநெல்வேலி | கொக்குவிலில் செல் தாக்குதலில் |
| 20-12-87 | சகிலா | றஜனி | மன்னார் | அச்செழு சுற்றி வளைப்பில் காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு |
| 23-12-87 | லெப்.தர்ஷினி | சிவரஞ்சினி | ஓமந்தை | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23-12-87 | நிதி | சிவமனோகரி | இடைக்காடு | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23-12-87 | நிர்மலா | ஒறின் அஜந்தி | யாழ்ப்பாணம் | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23-12-87 | நிகிந்தா | பிறேமலதா | சாகவச்சேரி | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23-12-87 | சதா | செல்வராணி | முள்ளியவளை | உரும்பராய் நேரடி மோதலில் |
| 13-03-88 | ரெஷானி | சுதாங்கனி | கொடிகாமம் | வேணுவிலில் எமது முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13-03-88 | லெப்.இமெல்டா | மரியகோசி | கொழும்புத்துறை | வேணுவிலில் எமது முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13-03-88 | டொறின் | சாந்தினி | கொடிகாமம் | வேணுவிலில் எமது முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13-03-88 | சுகீ | துஷ்யந்தி | நீர்வேலி | வேணுவிலில் எமது முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13-03-88 | ஹெலன் | அநுஷியா | காரைநகர் | வேணுவிலில் எமது முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13-03-88 | சுரபி | மஞ்சுளாதேவி | திருநகர் | வேணுவிலில் எமது முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 22-03-88 | லெப்.துர்க்கா | கமலாதேவி | புதுக்குடியிருப்பு | விசுவமடு முகாம் சுற்றி வளைப்பில் |
| 03-07-88 | 2ம் லெப்.மரியா | புவனேந்திர ஜோதி | வட்டுக்கோட்டை | விசுவமடு நேரடிமோதலில் |
| 03-07-88 | இராதை | விக்கினேஸ்வரி | நீர்வேலி | அலம்பில் செல்தாக்குதலில் |
| 04-07-88 | 2ம்லெப்.ஆனந்தி | காமாட்சியம்மா | பரப்புக்கடந்தான் | அலம்பில் செல் தாக்குதலில் |
| 21-11-88 | லெப்.அனிதா | | மட்டக்களப்பு | களவாஞ்சிக்குடி சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 04-07-89 | லெப். நித்திலா | | | வவுனியாவில் இந்திய ராணுவ தாக்குதலில் |

இவர்களுக்கு
எமது வீரவணக்கங்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.



தூங்கிய தமிழர் நெஞ்சை
துடித்திடச் செய்தோன்; ஈழம்
வாங்குவோம் எழுக! என்றே
வாலிப மனத்தை வென்றோன்
வேங்கைகள் சாவுக் கஞ்சா
வீரர்கள் என்றே சொல்லத்
தாங்கிய தலைவன்! எங்கள்
தளபதி! அன்புத் தம்பி!



AY BRANCH

TAMIL COORDINATING COMMITTEE
P.O. BOX-1699 VIKA
0110 - OSLO - 1